விலை ஒரு அணு. UDUMALAI BEERANGI டெலிபோன் 2597.

எல்லவரும் இன்புற்றிருக்க வேண்டும்

# உடுமலை பீரங்கி

ஆசிரியர் உடுமலை R. இரங்கநாதன்

வாரப்பதிப்பு

வெடி 1. ] சென்னை, சனிக்கிழமை (30-10-1948) [ குண்டு 4


# காங்கிரசும் திராவிட கழகமும்

1906 - ம் ஆண்டுதான் இந்திய சரித்திரத்தில் புது யுகம் பிறந்தது. விடுதலைப் போராட்டத்திற்கு அடிகோலப் பட்டது. இந்நாட்டு மக்களுக்குத் தன் மானவுணர்ச்சி, தன் சக்தியில் நம்பிக்கை - தன் திறமையில் உறுதி, அவ்வாண்டில்தான் வெளிப்படையாகத் தோற்றம் கொண்டது. "மகஜர்" யுகமும் வரப்பிரசாத கட்டமும் மாறிற்று. "எங்களை நாங்களே ஆண்டு கொள்வோம். எங்களுக்கும் ஆளும் திறமையுண்டு" என்று வாய்திறந்து சொல்லவும் துணிவேற்பட்டது "எங்களுக்கு சுயாட்சி வேண்டும்" என்ற கோரிக்கையும் குமுறலும் கார் மேகங்கள் குமுறி, மின்னல் மின்னி இடியிடிப்பது போல் வெளிப்பட்டன.

வெறும், சில்லறை உத்தியோகங்கள் என்ற எலும்புத் துண்டுகளாலும், கௌரவப்பட்டம் என்ற வாய்க்கரிசியாலும் இந்திய மக்களை இனி தலைதடவி, சவாரி செய்ய முடியாதென்ற உண்மையை அந்த ஆங்கில ஆட்சியாளர்கள் உணரும்படி செய்யப்பட்டது.

இதன்பலன், இரட்டை ஆட்சி என்ற பொம்மை ஆட்சி மாகாணங்களிலே ஏற்பட்டது. இந்த பொம்மை மந்திரி சபைகளின், சூட்சமக்கயிறும் மூக்குக்கயிறும் இருந்ததோ, கவர்னர்கள், வைசிராய்கள் இந்தியா மந்திரி-பிரிட்டிஷ் மன்னர் பார்லிமெண்ட் ஆகியவர்களிடம். அதாவது, கவர்னரும், தலைமை சர்க்காரும் ஆட்டுவிக்கும்படி ஆடும் அடிமைக் குரங்குகளைப் போலத்தான் இந்த மந்திரிசபைகளிருந்தன. இந்த பொம்மலாட்டத்திலும் சென்னை மந்திரிசபை ஒருவகையில் தன் மானத்துடன் நடந்து கொண்டது. மற்ற மாகாணங்கள் கட்டை வண்டி மாடுகளைப்போல் நடந்து கொண்டபோது, பானகல் அரசர் தலைமையிலிருந்த சென்னை மந்திரி சபை சவாரி வண்டிக்குதிரையைப் போன்றுதான் நடந்து கொண்டது. சாத்தியமான அளவு தன் மானத்தைக் காத்துக்கொண்டு மக்களின் உரிமையை சாதித்து, மக்கள் விரும்பும்படி, மக்கள் நலனுக்காகப் பாடுபட்டு வந்திருக்கிறது இந்த அடிமை மாட்டுவாழ்க்கையையும் மக்கள் சகித்துக்கொண்டிருக்கவில்லை. இந்த அடிமைத் தளையைத்தகர்த்தெறிய, சமய சஞ்சீவியாக வந்து சேர்ந்தார் காந்தியடிகள். அப்போது காந்தியார் வெறும் தென்னாப்பிரிக்கா வீரர் என்ற அளவில்தான் இங்கு வரவேற்கப்பட்டார். வெள்ளையர் - கறுப்பர் பேதத்தைத் தகர்த்தெறிய உலகம் கண்டறியாத புது விதப்போர் முறையான, சாத்வீகப்போராட்டத்தை உலகிலே தோற்றுவித்து

## வடநாட்டவரை வெற்றி கொண்ட வீரர்!



ஜெயப்பூரில் நடக்கும் காங்கிரஸ் மகா சபையின் தலைவராகப் பெருவாரி ஆதரவுடன் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள **டாக்டர் பட்டாபி சீத்தாராமய்யா.**

உலகப்பார்வையைக் கவர்ந்தவர் இவர். தன் தாயகம் திரும்பிவந்தார். கண்டார், தன் தாய்நாட்டில் தன் சொந்த சகோதரர்களின் நிலைமையையும் தென்னாப்பிரிக்கா ஆதி குடிகளின் நிலைமையும் அதிக வித்தியாசப்பட்டிருக்க வில்லை என்று. தொடங்கினார் முழுவிடுதலைப் போராட்டத்தை. உதித்தது காங்கிரஸ் வரலாற்றிலே விடுத்துக் காதைன்மான தன்னுரிமைக் காப்பு சகாப்தம். மண்டியிடும் மகஜர் யுகமும் கூழைக்கும்பிடு போட்டு வரம் கோரும் சகாப்தமும் ஓடிமறையலாயின.

இதேபோன்றே நீதிக்கட்சியிலும் புதுசகாப்தத்தைத் தோற்றுவித்தார். பெரியார் ஈவே - ரா. அக்கட்சியில் தொடர்பு கொண்டு பொறுப்பான செயல்களில் பங்குகொண்டதும். அதுவரைக்கும் நீதிக்கட்சியை பட்டம் பதவி வேட்டைக் கட்சி என்றும் ஜரிகைத் தலைப்பாகைகள் பணமூட்டைகள் ஆதிக்கச் சுயநலக்கட்சி என்றுமே எதிரிகள் அழைத்துவரும் வகையில் இருந்தது.

காங்கிரஸின் அடிநாளிலே தலைவர்களின் முயற்சியால் இந்திய மக்களுக்கு சில உயர்பதவிகளும் உத்தியோகங்களும் வாய்க்கவழி ஏற்பட்டது.

போல் பானகல் ஆட்சி காலத்திலே ஆங்கிலரிடமும் ஆங்கிலருக்குத் திருவடி தாசர்களான பார்ப்பனரிடமும் ஏகபோக உரிமையாக விருந்த உத்தியோக கூடங்களில் திராவிட மக்களில் சிலர் காலெடுத்து வைக்க வழி பிறந்தது. சட்டசபைகளில் இடம்பெற்றனர்,

இந்த அடிமை ஊழிய பட்டம்பதவிகளால் அடிமைவாழ்வுதான் நீடிக்குமென்று கருதி காந்தியார் அவற்றை உதறித்தள்ளச் செய்ததுபோல் நீதிக்கட்சியும் பெரியார் ஆதிகத்திற்கு வந்ததும் கைதூக்கி சட்டசபை அங்கத்தினர்கள் பதவிகளையும் கைகாட்டி கைகாட்டு மந்திரி பதவிகளையும் உதறித் தள்ளி திராவிட மக்களின் தன்மானத் தனியுரிமை தன்னாட்சிப் போராட்டத்திற்கு களமமைத்தார். பெரியார் மேற்கொண்ட போராட்டம் வெறும் அரசியல் உரிமைத்துறையை மாத்திரமன்றி சமுதாய விடுதலைத் துறையைத்தான் முக்கிய குறிக்கோளாகக்கொண்டது.

ஆங்கிலேயர்களோ சில நூற்றாண்டு கரையான்களேயாவர். சமயத்தின் பெயரால் சாதியின் பெயரால் பிறவி உயர்வு தாழ்வின் பெயரால் வைதீகத்தின் பெயரால் பல்லாயிரமாண்டுகளாக திராவிடமக்கள் ஆரியர்களுக்கு ஆரியத்திற்கு கொத்தடிமை குலவடிமை யாகி மாக்களிலும் கேடு கெட்ட தன்மானமிழந்த தன்னறிவிழந்த தன்னுணர்விழந்த மாக்களாகி வாழ்ந்து வருகின்றனர். இந்தக் கொடுவிலங்குக் கொடுஞ் சிறையிலிருந்து மக்களை மீட்பதைத்தான் தன் முதல் கடமையாகக் கொண்டார் ஈரோட்டு வீரர். இந்தப்பணியைத் திறம்பட செய்யும் ஆசைகொண்டுதான் திராவிடக் கட்சியான நீதிக்கட்சியின் பொறுப்பை மேற்கொண்டார். அப்படி மேற்கொண்டும் தான் மேற்கொண்ட தன் மானக்காப்புப் போராட்டத்திற்கு ராஜபாட்டையாக அது இல்லாததைக் கண்டார். காரணம் அது பணமூட்டைகள் பதவி வேட்டைக்காரர்களின் கட்சி என்று எதிரிகள் பிரசாரம் செய்து மக்கள் மனத்தில் களங்கத்தை உண்டுபண்ணியிருந்ததேயாகும். இந்த விஷமப்பிரசாரம் குல்லூக' தந்திரத்தைக் கையாண்டு தான் சத்தியமூர்த்தி கும்பல்கள், நீதிக்கட்சிக்குக் குழிதோண்ட நப்பாசை கொண்டன. ஆனால் இந்த 'வெட்டியான் வேலையை' சத்திய மூர்த்திக் கும்பல் செய்ய விடலாது, மலைபோல் குறுக்கே வந்து நின்றார் பெரியார். சத்தியமூர்த்திதான் குழிதோண்டிக்கொண்டு இந்த உலகத்திலிருந்தே மறையவேண்டியதாயிற்றே

யன்றி நீதிக்கட்சியை புதைக்க வியலவில்லை. எதிரிகள் மேற்கண்ட விஷமப் பிரசாரம் என்ற வன் கயிற்றை வீசி காலை வாறிவிட்டால் நீதிக்கட்சி இடறிவிழுந்து ஏதோ ஒரு சிறிது காயமுற்றுத் தவித்ததென்னமோ உண்மைதான். ஆனால் வந்தார், பெரியார், தலைமை பதவிக்கு, விரைந்து ஊனத்தை நீக்கினார். நிமிர்ந்து நிற்கச் செய்தார் உரம்கட்டி பதவி வேட்டை பணமூட்டைகள் என்ற பிரசார காற்றுகட்சியை இன்னும் அவதிக்குள்ளாகுவதை உணர்ந்தார். அத்துடன் நீதிக்கட்சி வெறும் அரசியல் துறைக்கட்சி. வைதீகமும், சாதிச்சேறும் அதில் ஒட்டிக்கொண்டிருந்தது. கழுவித்துடைக்க முடியாதபடி ஒட்டிக்கொண்டிருந்தன அவை எனவே தான் கட்சியின் பெயரை மாற்றினார் திராவிடக் கழகமென்று—திராவிட உரிமை தலைவர் தனிக்களத்தை அமைத்துக் கொண்டார்.

காந்தியார் ஆதிக்கத்திற்கு வந்ததும் காங்கிரஸ் எவ்விதம் சுயாட்சித் தனிப் போர்க் கழகமாயிற்றோ அப்படித்தான் இப்போது பெரியாரின் ஆதிக்கத்திற்கு வந்த நீதிக்கட்சி—திராவிட கழக திராவிட மக்கள் சமுதாயத்தனியுரிமைப் போர்தனிக் கழகமாக விளங்குகிறது.

காந்தியார், போர் முறை சாத்வீக முறை; மனத்தை மாற்றும் பிரசார முறை. இந்த மனமாற்றத்திற்கு உரம் தேடுவதற்காக இடையிடையே சாத்வீகக் கிளர்ச்சிகளையும் உடன் தொடர்பாகக் கொண்டது.

இக்கிளர்ச்சியால், தாய்நாட்டு மக்களுக்கு அளவு மீறிய துன்பமோ, கஷ்டமோ நஷ்டமோ, உயிர்ச்சேதமோ ஏற்பட்டால், இந்த சாத்வீகக் கிளர்ச்சியையும் தற்காலிகமாக, நிறுத்திவைத்துக்கொள்வார். உரியகாலத்திலே மீண்டும் தன் போராட்டத்தைத் தொடங்குவார். ஏறக்குறைய இது வெறும் மனமாற்றும் பிரசாரப் போராட்டமேயெனலாம். பெரியார் கொண்டதும் இதே மனமாற்றப் பிரச்சாரக் கிளர்ச்சிப் போராட்டமேயாகும். பலாத்கார நாசவேலைத்திட்டமல்ல.

காந்தியாரின் சாத்வீக முறையால், நமது குறிக்கோளை அடைவதில் காலதாமதம் தானுயிற்று. பிரிட்டிஷ் ஆட்சியாளர்களும், வெறும் பேரப்பேச்சு வட்டமேஜை மகாநாடுகளும், சமரசத் தோழமைப் பேச்சுக்களும் நடத்துவதிலே காலத்தைக்கடத்தித் தங்களுடைய வழக்கமான நடவடிக்கைகளை நீடித்துக் கொண்டிருந்தனர்.

வாலிப உலகமோ, இந்த வழ வழா, தூங்கு மூஞ்சி போக்கைக்கண்டு, கவலை கொண்டது வாலிப வுள்ளம், உடனடியாகக் கைமேல்பலனை அடைய அவாவுறுவது இயற்கைதானே ஜவகர் சுபாஸ் யுகம் காங்கிரசிலே ஏற்படலாயிற்று. விரைந்து நம் நாட்டை நமதாக்கிக்கொள்ள வேண்டுமென்று துடித்தனர். காந்தியாரிடம் பேரம் பேசிக் காலம் கடத்தும் தந்திரம் பண்டித ஜவகர்லாலிடம் செல்லுபடியாகாதென்பதை ஆட்சியாளர் உணரவேண்டியதாயிற்று. வெளிப்படையாகக் கூறுமிடத்து, காங்கிரசில், காந்தியாரின் தலைமைப் பதவி நீங்கி நேரு தலைமைப் பொறுப்பு ஏற்றதன் பின்னர் தான் நாட்டு விடுதலைப் போராட்டம், விரைந்து பலனைத் தந்ததென்பது வெள்ளிடை மலையாகும்.

இதேபோன்று இப்போது திராவிடக் கழகத்திலே தோழர் அண்ணாத்துரையின் தலைமை ஏற்பட்டிருக்கிறது. இதனால், பெரியார் கழகத்திலிருந்தோ, கழகத் தொடர்பிலிருந்தோ, கழகப் பணியிலிருந்தோ கழகத்திற்கு வழிகாட்டும் பொறுப்பிலிருந்தோ, கழகத்தின் மூலையாக விருப்பதிலிருந்தோ விலகிக்கொள்வார், ஒதுங்கிக் கொள்வார், ஓடி ஒளிந்துகொள்வார், என்று அஞ்சுவதற்குக் கிஞ்சிற்றும் இடமே கிடையாது. தோழர் அண்ணாவும் தகப்பன்சாமித்தனமாக நடந்துகொள்பவருமல்ல, ஏதோ இடையிலே கருத்து வேற்றுமை ஏற்பட்டாலும் பெரியாரிட்ட கோட்டை மீறி நடக்க முற்படாதவர்தான்

பெரியார் சிறுயானைகளுக்கு வழி காட்டியாகி காட்டிலே பாதை அமைத்து செல்லும் முது பெரும் யானையைப்போல் நமது தன்மானப் போராட்டத்திற்கான பாதையை அமைத்து விட்டார். இங்கே, கண்ணியிருக்கிறது, இங்கே, அகழியிருக்கிறது, இங்கே படுகுழி யிருக்கிறது. இங்கே வேட்டைக்காரர் பதுங்குமிடம். என்றெல்லாம் சுட்டிக்காட்டி தன் மானக்காப்புப்போர்க்களத்தைச் செப்பனிட்டு வைத்துள்ளார்.

காலம் இப்போது திடீர் மாறுதலையுற்று விட்டது. தென்னாட்டு - வடநாட்டார் வேற்றுமையுணர்ச்சி உச்சநிலையயைக் கொண்டு விட்டது. ஆட்சித் தலைநகரான டில்லிமா நகரிலேயே இது புகைந்து சுடர் விடத் துவக்கமாகி விட்டதென்றால் மற்ற விடங்களில் விரைந்து பரவுவதற்கு என்ன தடை? எனவே இந்தச் சவாலை ஏற்றுத் தன் மானக்காப்புப்போரை உடனடியாக நடத்தித் தீரவேண்டிய அவசரநிலைமை ஏற்பட்டுவிட்டது. பேரப்பேச்சுக்களுக்கோ நிதான நடவடிக்கைகளுக்கோ இது காலமல்லவென்றும் விரைந்து தற்காப்புப் போரை நடத்தியாக வேண்டுமென்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறதென்றும் சொல்லும்படியாகிவிட்டது. எனவே தான் காங்கிரசில் நேரு சிங்கங்களின் தேவை ஏற்பட்டதுபோல் இப்போது அண்ணாத்துரை போன்ற வாலிப சிங்கக் கூட்டங்களின் தேவை ஏற்பட்டிருக்கிறது.

குடும்பத்தில் நிர்வாகப் பொறுப்பு மாறுவது போலத்தான் இப்போது இக்கட்சிப்பொறுப்பும் மாறியிருக்கிறது. அதாவது வயதான ஐயாவிடமிருந்து வாலிபஅண்ணாவிடம் மாறுகிறது.

ஐயாவுக்கு வயதாகி விட்டதென்றால் வலிவிழந்த கிழமாகி விட்டாரா என்று கேள்வி எழலாம், சிலரிடம் துக்கத்துடன்சீற்றத்துடன். இல்லவேயில்லை. வலிவிழக்கவில்லை அவர். உடல் கிழடுதட்டியுள்ளது உண்மையே. ஆனால் உள்ளமும் அறிவும் கிழடுதட்டவில்லை. தலைமயிர் நரைத்துவிட்டதுண்மையே. ஆனால் அவருடைய ஆற்றலும் ஊகமும் பொதுநலப்பணி ஆர்வமும் நரைக்கக் கிடையாது. பல்லாயிரம் வாலிபர்களைவிட அவரது உள்ளமும் உணர்வும் அறிவும் ஆற்றலும் அதிகமான வாலிபத்துடிதுடிப்பும் உரமும் கொண்டிருக்கிறது.

அப்படியானல் அவரே கூறுகிறாரே! "எனக்கு வயதாகி விட்டது. நான் சிறையில் சென்று ஓய்வு கொள்ள விரும்புகிறேன்" என்று கவலையோடு ஏக்கத்தோடு, துக்கத்தோடு துயரத்தோடு சிலர் கேட்கலாம். "ஒழிந்தது தொல்லை இனி திராவிடக்கட்சியை "சத்திய மூர்த்தி" (குழிதோண்டிப் புதைத்தல்) செய்து விடலாம். வாலிபக் காளைகளை விரைவில் தட்டி அடக்கி விடலாம்" என்று எதிரிகளும்பார்ப்பன கும்பல்களும் எக்காளமிடலாம். ஆனல் அது வெறும் கற்பனையும் கனவுமேயாகும். பெரியாரைப் போன்றே அண்ணா எல்லாவகைச் சிறப்புக்களும் எல்லாவகைத் திறமையும் ஆற்றலும் கொண்டிருக்கிறாரென்று துணிந்து கூறவியலாதாயினும் ஐயாவுக்குகந்த வார்ஸ் இப்போதைக்கு அண்ணாதான்" "என்றுமாத்திரம் துணிந்து கூறலாம். பெரியாரும் இனி காந்தியாரைப் போன்ற வழி காட்டும் "ஞானகுருவின்" நிலைமையிலிருந்து இந்த வாலிபத்தலைவருக்கு நல்வழிகாட்டி முன்னேறச் செய்வாரென் பதிலும் தடையில்லை.

காந்தியாருக்கு ஜவகரைப் போல் அண்ணாவும் பெரியாரிடம் நடந்து கொள்வார். நடந்து கொள்ளத்தான் வேண்டும். காந்தியார் துணைவலிவின் றேல் நேருஜி "உலகக்கண்களில் பட்டிருக்க முடியாது. பெரியாரின்றேல்" அண்ணாவையும். வெளியுலகம் கண்டறிய முயன்றிராது என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது. மற்றொரு உண்மையையும் கவனிக்க வேண்டும். அண்ணா அறிவில் அண்ணாதான்; எழுத்தில் அண்ணாதான், சொல்லாற்றலில் அண்ணாதான். ஆனல் பெரியாரைப்போல், பணமூட்டைகள் முதல், பணப்பிச்சைக்காரர்கள் வரை எல்லாரையும் வலைவீசிப் பிடிக்கும் பண்பு தோழர் அண்ணாவிட மில்லைஎன்பதை எடுத்துக்காட்ட வருந்துகிறோம். வாலிப உலகத்தின் உள்ளம் கவர்ந்த வீரர் - தளபதி என்பது உண்மையே. ஆனல் உரிமைப் போராட்டத்தில் துடிதுடிப்பு சிங்கங்கள் மாத்திரமன்றி, ஒருவகையில் பணமூட்டைகளின் உதவியும் தேவைதான் என்பதையும் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது. இதிலிருந்து இந்தப் பணமூட்டைகளை திராவிட கழகத்தில் "காங்கிரஸ் பிர்லா"க்களாக்கிவிட வேண்டுமென்று நான் கூறவில்லை, அவர்களை எதிரிகளின் கைப்பாவைகளாகவும், நம்மையேதுக்கும் ஆயுதங்களாகவும் உபயோகித்துக் கொள்ளாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பதே எமதுயோசனை, பண்டித நேருவை, மேனுடுகள் உணரும்படி செய்தது. அவருடைய எழுத்துக்கள் புத்தகங்கள், சுயசரிதை இதே போல் தோழர் அண்ணாவையும் எதிரிகளும் எதிர்கட்சியாரும் - பார்ப்பனரும் "அறிஞர்" என்று உளமறிய பாராட்டச் செய்ததும் எழுத்துவன்மையும் சொல்வன்மையும் தான் ஆயினும்'பெரியாருக்குள்ள அளவு உளவன்மையும் உறம்பெற்றாக வேண்டும். இப்போது ஏற்பட்டிருக்கும் போராட்டத்தை தலைமை தாங்கி நடத்த சிங்கத்தின் தீரமும் நரியின் தந்திரமும் தேவைப்படுகிறது. இத்துறையில் அனுபவசாலியான பெரியாரின் ஆலோசனையும் வழிகாட்டுதலும் இன்றியமையாததென்பதை உணர்ந்து தோழர் அண்ணாத்துரை நடந்து கொள்வாரென்று எதிர்பார்க்கிறோம். பண்டித நேருவின் தலைமையில் காந்தியார் வழிகாட்டுதலில் இந்திய ஆட்சிச் சுதந்தர மடைந்தது போல் அண்ணாவின் தலைமையில் பெரியாரின் வழிகாட்டுதலில் திராவிட நாடு உரிமைப் போரில் வாகை - சூடும் மென்று எதிர்பார்க்கிறோம்.

பெரியாரிடம், உலகத்தவருக்கு மாத்திரமன்றி ஆட்சியாளருக்கும் மதிப்புண்டு, கிலியுண்டு. வாலிப உலகம் கண்டு, அக்காய்ச்சலை, அவர்கள் குறைத்துக்கொள்ள எண்ணலாம். இதற்கு வழிவிடலாகாதென்பதும் எமது அவா.


சிறந்த சரக்கு! குறைந்த விலை!!

**விஜயா எம்போரியம்.**

உரிமையாளர்:- எல். பி. டி. சுப்பராஜுலு
பெரியகடைத் தெருவு,
உடுமலைப்பேட்டை.

எல்லாவித ஸ்டேஷனரி சாமான்களும்.
ஆயில் மென்ஸ்டோர்ஸ். முதலிய
சகலவித சாமான்களும் கிடைக்கும்.


## நமது விற்பனையாளர்கள்

—: (x) :—

1. கே. ஆர். சஞ்சீவிமுத்து ராஜா
   கடம்பர் கோவில்,
   குளித்தலை.
2. பி. ராஜகோபால்
   திருக்காட்டுப்பள்ளி.
3. என். எம். என். முஹம்மது ஹனீபா
   தெற்கு வெளி வீதி,
   மதுரை.
4. தாகூர் & கோ
   புதுச்சேரி.
5. எம். கே. சுந்தரம்.
   சிதம்பரம்.
6. மணி ஸ்டோர்ஸ்
   சேந்தமங்கலம்.
7. சாந்தா நியூஸ் மார்ட்
   கருவூர். *
8. யூ. பி. கிருஷ்ணசாமி
   தளிரோடு
   உடுமலைப்பேட்டை. *

* இக்குறிப்பிட்ட இடங்களிலும், ஹிக்கிம்பாதம் ரயில்வே ஸ்டால்களிலும். உடுமலை பீரங்கி முதல் புத்தகம் கிடைக்கும்.

ஏஜண்டுகளில்லாத இடங்களில் விற்பனைக்கும், விளம்பரம் சேர்க்கவும் ஏஜன்டுகள் தேவை.

"நிர்வாகி"
"உடுமலை பீரங்கி"
பெரியமெட்டு,
சென்னை, 3.

## அறிவிப்பு-

ஏஜண்டுகள், தயவுசெய்து நிபந்தனை நமூனுக்களைக் கையெழுத்துச்செய்து அனுப்புவதுடன் நிபந்தனையின் படி அட்வான்சும் அனுப்பித்து பத்திரிகைக்கு ஆதரவு அளிக்க வேண்டுமெனக் கோருகிறோம்.

# முட்டுக்கட்டை அவசியம்?

உடுமலை. B. இரங்கநாதன்.

## முட்டுக்கட்டை.

தேரை இழுப்பவர்களின் நோக்கந்தானென்ன? தேரை, இருக்கும் இடத்திலிருந்து நகர்த்து. தெரு வழியே இழுத்து, நான்கு தெருவுகளிலும் சுற்றிவந்து, மறுபடியும் இருந்த இடத்திற்கே கொண்டு வந்து, தன் யதாஸ்தானத்தை அடையச் செய்வதுதானே. அவர்களுடைய நோக்கத்திலோ அல்லது செய்கையிலோ எதுவேனும் பிசகுண்டா? எள்ளளவும் இல்லையல்லவா? பின் எதுக்காகவையா முட்டுக்கட்டை? முட்டுக் கட்டையை சக்கிரத்துக்குக் கொடுக்கும் போதெல்லாம் தேர், சக், சக்கெனவே அசைந்தசைந்து நிற்பதையும், திரும்புவதையும் நாம் பார்க்கின்றோம். அதனால் இழுப்பவர்களுக்கோ கஷ்டம், யதாஸ்தானம் சேருவதிலும் தாமதம், சமயா சமயங்களில் தேரை இழுப்பவர்கள் முட்டுக்கட்டை வைப்பவனை சலித்துக்கொள்வதுமுண்டு. ஏன்? வேகத்தில் போய்க்கொண்டிருக்கும் தேரின் போக்கை, திடீரென முட்டுக்கட்டை கொடுத்து நிறுத்தியதில் ஏற்பட்ட அதிர்ச்சியில் இழுப்பவருக்கு ஏற்படும் புஜ வலியே காரணம்! இழுப்பவர்களுக்கு ஏற்படும் புஜ வலிக்கும் மனச்சலிப்புக்கும் அஞ்சி முட்டுக் கட்டையை கக்கத்தில் வைத்துக் கொண்டானேயானல் தேரின் கதியென்னகுமென்பதை நேயர்களே அறிவார்கள்.

## பிற கக்ஷிகள்

அதுவே போல், காங்கிரஸின் நோக்கம் எவ்வளவு போற்றத் தக்கதாயிருந்தாலும், எவ்வளவு புனிதமாயிருந்தாலும், எவ்வளவு உயர்வாயிருந்தாலும், ஏற்படும் குற்றங் குறைகளை எடுத்துக்காட்ட எதிர் கக்ஷிகள் இருந்தேயாக வேண்டும். அப்படியில்லையென்ருல், வேண்டாமென்ருல், அல்லது மெஜாரிட்டி பலத்தைக் கொண்டு பிற கக்ஷிகளை நசுக்கிவிடுவதாயிருந்தால் முட்டுக் கட்டை இல்லாத தேரின் கதியையே அடையவேண்டிவரும் என்பதை நாம் அலக்ஷியப்படுத்துவதற்கில்லை. எக்காலத்திலும்எதிர்ப்புகள் இருந்துதான் தீரும். இருந்தாகவும் வேண்டும். நாம் காரியத்தை ஜெயித்து வெற்றிக்கொடியுடன் வெளிவரவேண்டுமானல். மிக ஜாக்கிரதையாக, ஒவ்வொரு விஷயத்திலும் எதிர் கக்ஷிகள் என்ன சொல்லுகின்றன எனக் கவனிக்கத்தான் வேண்டும். அவ்விதஎதிர்ப்புகளைபாரபக்ஷமற்ற நடு நிலை வகித்து, செவ்வனே ஆராய்ச்சி செய்து, மக்களுக்கும் நாட்டுக்கும் நன்மை பயக்கும்படியானவைகளையே செய்தல்வேண்டும். அது செய்யாமல் "மெஜாரிட்டி நம் கக்ஷி, நாம் எதுவேண்டுமானலும் செய்யலாம்," எனக் கொள்வது மிகவும் ஆபத்தாகவே முடியுமென்பது நாம் அனுபவத்தில் கண்டறிந்த உண்மை.

## முதல் காங்கிரஸ் மந்திரி சபை

உதாரணமாகவே எடுத்துக்கொள்வோம். சென்னையில் முன் ஏற்பட்டிருந்த காங்கிரஸ் மத்திரி சபை காலத்திலே, எதிர் பெஞ்சியிலிருந்து சொல்லப்பட்ட ஒவ்வொரு மறுப்புக்கும் சொல்லுக்கும் எவ்விதம் பதிலளித்தார்கள்? தன் கக்ஷியைச் சேர்ந்த பலரும் பக்கெனவே சிரிக்குமாறு, பரிகாச தோரணையில் குட்டிக் கதைகளாலும் குதர்க்க வாதத்தாலுமல்லவென்பதை யாரேனும் சொல்லமுடியுமா? கக்ஷி பலத்தால் அவசரப்பட்டு நிறைவேற்றிய சட்டங்களெல்லாம் எந்நிலையில் இருக்கின்றன? எதற்காக உபயோகமாயின? உபயோகப் பட்டும் வருகின்றன? எதிர் கக்ஷிகளுக்கும் சற்றேனும் செவி சாய்த்து, கருணை காட்டியிருந்தால், நிறைவேற்றப்பட்டிருக்கும் சட்டங்கள் எத்தனையோ ஆரம்பத்திலேயே கைவிடப்பட்டிருக்கும் என்பதை சொல்லாமலிருக்கமுடியவில்லை. கொண்டு வந்ததின் நோக்கம் கெடுதி எனச் சொல்ல நான் முன் வரவில்லை. ஆனல் அதற்கும் ப்ாலமுண்டு. சமயமுண்டு, ஒரு காலத்தில் இகழப்படுபவைகள் மற்ளொரு காலத்தில் புகழப்படுவதும் ஒரு காலத்தில் வெறுப்புக்கிடமாயிருந்தவைகள் பின் ஒரு காலத்தில் விரும்பப்படுவதையும் நானறிவேன்.

# தொழிலாளிகளே!

## எம் வணக்கம்.

——: (x) :——

"உடுமலை பீரங்கி" உங்கள் ஊழியன்: உற்ற துணைவன். அல்லும் பகலும் உங்களுடைய நலனையும், முன்னேற்றத்தையும் கருதுபவன், சிறந்த முறையில் பணியாற்றி உங்கள் வறுமையையும், இன்னல்களையும் களைந்தெறிந்து, தக்கதோர் முறையில் பாடுபடவென முன்வந்துள்ளான். ஆக்கவேலையை மேற்கொண்டுள்ளான். மனித நாகரிகத்துக்குப் புறம்பானவர்கள் என்று ஏற்பட்டிருக்கும் நிலையைமாற்றி தொழிலாளர்களே! கடை ஆணிகள், முக்கியமானவர்கள், முதலிடம் பெறவேண்டியவர்களென்பதை வாயளவாலல்ல, எழுத்தாலல்ல ஆனல் நடைமுறையில் காட்டியே தீரகங்கணம் பூண்டுள்ளான் என்பதை ஒவ்வொரு தொழிலாளியும் உணர வேண்டியது. இது வரையும், ஏழைத் தொழிலாளர்கள் பல துறைகளிலும், பலரின் சௌகரியத்துக்கும், சுயநலத்துக்கும், பதவிக்கும். பணப்பெருக்கத்துக்கும் ஈவிரக்கமின்றி உபயோகப் படுத்தப்பட்டு வந்திருக்கிறார்கள் என்பதை நாமறிவோம். அந்நிலை மிக விரைவே மாறிவருகின்றதென்பதை நாங்கள் சொல்ல வேண்டியதில்லை. ஆயினும், ஆத்திரப் படுவதாலும், ஆவேசங்கொள்வதாலும், அட்டூழியங்களில் ஈடுபடுவதாலும் கோரிய பலன் நமக்குக் கிட்டுவதில்லை என்பது யாவரும் கண்டறிந்த உண்மை. இச்செயல்களால் உண்மையை அறிந்து, நாம் மேம்பட்டு வறுமையிலிருந்து தப்ப வழிகளைக் காணமுடியாதவர்களாவோம்.

இதுவரையும் தொழிலாளருக்குத் தலைவர்கள் என வெளி வந்தவர்கள் பிரமாதமாகச் சாதித்துவிட்டதாக எமக்குத் தோன்றவில்லை. அதே சமயத்தில் ஏதோ சிறிதளவுக்கேனும் நன்மை ஏற்படாமலுமில்லை யென்பதையும் ஒத்துக்கொள்ளுகிரேம். வேலை நிறுத்தங்களாலும், கதவடைப்புக்களாலும், மாத்திரமே கவனத்தைச் செலுத்தி வந்தால் தொழிலாள சமூகம் முன்னேறுவதெக்காலம்? மனக் கசப்பைக்காட்ட மறியல் அவசியமாயிருந்த காலம் இருந்ததுதான். இப்போதோ மதிப்பை இழந்து விட்டது. மறியலை ஆதரித்து கையாண்ட தலைவர்களும் சமீப காலாகம வெறுத்துவருவதை நேயர்கள் அறிவார்கள். ஆகவே நாம் இனிச்செய்ய வேண்டுவது என்ன? தொழிலாளர் முற்படுவதற்கான வழி என்ன? சமத்துவத்தையடையும் மார்க்கமென்ன? என்பதை ஒவ்வொரு சமயத்தும் விரிவாக விளக்கிவருவது மல்லாமல் அதற்கான ஆக்கவேலையையும் உடனுக்குடனே மேற்கொள்ள வேண்டியதும் முக்கியம். தொழிலாள சகோதர சகோதரிகள் சற்றே பொருத்தருள வேண்டும். "உடுமலை பீரங்கி" நேற்றுமுளைத்து நாளைநசிக்கும் காளானல்ல. ஆலமரம் போல ஆள வேரூன்றியிருக்கும் ஆணிவேரில் வெளிக்கிளம்பும் முளையேயாகும். 'உடுமலை பீரங்கி'யும் 'குண்டாந்தடி'யும் இருக்கும்வரை தொழிலாளர்களே! உங்களை ஏமாற்ற முடியாது. எத்தனிப்போருக்கு குண்டாந்தடி கைவசமுண்டு என்று விரட்டியடியுங்கள்.

"குண்டாந்தடி."

## மூளைக்கு வேலை.

கார்ப்பொரேஷன் பொது வரிப்பணத்திலிருந்து காந்திக்கு ரூ. 10,000 கொடுக்கவேண்டுமென வரவு செலவு கமிட்டி சிபார்சு செய்திருப்பது நியாயமா?

யோசித்து வையுங்கள் அடுத்தவாரம் கவனிப்போம்.

ஆசிரியர்.

தந்தி:- "மம்மா" டெலிபோன்:- 4749.

ஏ. எம். அப்துல் காதர் மரைக்காயர்.

இரும்பு வியாபாரம், பௌண்டரி
சப்ளை கன்ட்ரேக்டர், விவசாய கருவிகள்
உற்பத்தியாளர்

70 B. ஹாரீஸ் ரோடு
புதுப்பேட்டை, மௌண்ட் ரோடு சென்னை 2.

பிரேன்ச் அண்டு வொர்க்ஷாப்
2-22. பழைய ஆட்டுத்தொட்டித் தெரு:
இராயபுரம், சென்னை.

கட்டிடங்களுக்கும், லாடங்கள் தயாரிப்பதற்கும் இன்னும்
இதர எல்லா வேலைகளுக்கும் உதவக் கூடிய
பழைய இரும்பு சாமான்களும் கிடைக்கும்

“உடுமலை பீரங்கி”யைப் பற்றிய உங்கள் கருத்துக்களை கூசாமல் தெரிவிக்கலாம். அக்கருத்துக்கள் பத்திரிகையை மேலும் விருத்தி செய்ய பெரிதும் பயன்படும்.

நிர்வாகி.

எல்லவரும் இன்புற்றிருக்க வேண்டும்

உடுமலை பீரங்கி

ஆசிரியர் உடுமலை B.இரங்கநாதன்

வாரப்பதிப்பு.

| சென்னை | சனி | 30-10-48 |
|---|---|---|

# வெற்றி! ஆனால்......?

—: (x) :—

புது டெல்லிக்கு ஒரு புதுப் பெயர் சூட்டவேண்டுமென்ற எண்ணத்தைக் கிளப்பியவர் தோழர் கந்தாலால். அப்புதுப்பெயர் ஒரு தென் இந்தியரின் பெயராக இருக்க வேண்டுமென்றே சென்ற இரண்டு தலையங்கங்களிலும் போராடி வருகின்றோம் என்பது நேயர்கள் அறிந்ததாகும்.

இப்போராட்டத்திற்கு ஓரளவு வெற்றி கிட்டியுள்ளது என்பதற்கு ஐயமில்லை. அகில இந்திய காங்கிரஸ் தலைவர் பதவிக்கு ஒரு வடநாட்டாரும் ஒரு தென்னாட்டாரும் போட்டியிட்டதில், ஒரு தென்னாட்டார் வெற்றி பெற்றதென்பது எம் சொந்த வெற்றியேயாகும். இவ்வெற்றியைக் கண்டு அகமகிழ ஆனந்தம் கொள்ளுகிறோமென்றாலும், வெற்றியால் ஏதொரு வித்தியாசமோ மனமாற்றமோ ஏற்பட்டுவிட்டதாகச் சொல்வதற்கில்லை.

பந்தய விளையாட்டில் இருவர் ஓடினார்கள். ஒருவர் ஜெயித்தார். மற்றவர் பின்தாங்கினார். இந்த நிலைதான் இங்கேயும். இதைக்கண்டு வீண் மயக்கங் கொள்ளவோ, உண்மைகளை மறைக்கவோ, மற்றவருடன் சேர்ந்து சங்கு ஊதவோ நாம் எவ்விதத்தும் தயாராக இல்லை.

வட இந்தியாவிற்கு உண்மையாகவே, தென்னிந்தியாவும் சரிபங்கும்சமத்துவமும் கொள்ளவேண்டுமென்ற நல்ல எண்ணம் ஒரு கடுகளவாவதிருந்திருந்தால், போட்டிக்கே இடமில்லாமல் பட்டாபி அவர்கள் ஏக மனதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பார். அப்படியே போட்டி ஏற்பட்ட காலத்தும், காங்கிரசுக்கே இரு கடையாணியாயுள்ள, ஜவஹரும், பட்டேலும் நடுநிலைமை வகித்து, மௌனம் சாதிக்க வேண்டியிருந்திருக்காது. ஜவஹர்சொல்லியும் பட்டேல் ஆஞ்ஞாபித்தும், மறுத்தும், மீறியுமே தாண்டன் அவர்கள் போட்டியில் நின்றார் எனச்சொன்னால் பள்ளிப் பையனும் நம்பமாட்டான். இருக்கும் மதிப்பும் மரியாதையும் என்னாகுமென்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

பெரும் தலைவர்கள் இருவரும், மற்ற வடநாட்டு அநேகரும் தென்னிந்தியரான தோழர் பட்டாபிக்கு ஆதரவு அளிக்காமல் நடுநிலை வகித்ததிலிருந்தும், தென்னாட்டவர் அத்தனைபேரும் அத்தனை பத்திரிகைகளும், தம்மையும் மறந்து, “அகிலம்” என்னும் வேதாந்தத்தையும் விடுத்து, “S. ஸ்ரீனிவாச ஐயங்காருக்குப் பின் ஒரு தென்னிந்தியரும் தலைமைப்பதவிக்கு வரவில்லை. அதனால் தென்னிந்தியரான பட்டாபியையே ஆதரிக்க வேண்டும்” எனக் கூப்பாடு போட்டதிலிருந்தும் வடஇந்தியாவுக்கும் தென்னிந்தியாவுக்கும் ஒரு நிரந்தர பிளவு இருந்து வருவதையும் தவிர்க்க முடியாததையும், தென்னாட்டுத் தலைவர்களும் வடநாட்டுத்தலைவர்களும் பகிரங்கமாக ஒத்துக் கொண்டார்கள் எனச் சொல்வதிலும், முடிவுகொள்வதிலும், எவ்வித பிசகும் இல்லை. அதற்கான வழிவகைதேடி ஏற்பாடு செய்தலே இருநாட்டுக்கும் உறவு துண்டிக்காமல், முக்கியமான விஷயங்களில், கூடிப் பணியாற்றி எல்லாத்துறைகளிலும், பயமின்றி முன்னேறி, உலகில் ஒரு மதிப்பிற்குரிய அந்தஸ்தை அடைய முடியும். இதைச் செய்யாமல் ஒருவரையொருவர் ஒடுக்குவதிலும், அடக்குவதிலும், சுரண்டுவதிலுமே கண்ணுங்கருத்துமாயிருந்தால், நாம் முற்படுவதற்கான காலமும் கிட்டுமோ என்றுதான் கேட்கின்றோம்.

“பிராமணர் - பிராமணரல்லாதார்” என்ற பிரச்னையின்பேரில் ஓமந்தூரார் பிரதமர் ஆக்கப்பட்டார் என்பதையும் வடநாட்டார் - தென்னாட்டார்என்றபிரச்சினையின் பேரில் தோழர் பட்டாபி தலைவரானதும் இரகசியமல்ல. அப்படியிருந்தும், தேர்தலில் வெற்றிபெற்றுத் தலைவரானதும், அப்பட்டாபியவர்களே “வேதாளம் முருங்கை மரம் ஏறிக்கொண்டது” என்றாற்போல் “அகில இந்தியா’ என்ற பழமையை ஞானோதயத்துடன் பேசவாரம்பித்துவிட்டார் என்றால் இப்போக்கை பெருந்தோரணையென்று சொல்வதா, அல்லது நன்றிகெட்டதனமென்று கொள்வதா, அல்லது உண்மையை மறைத்து திரித்துக் கூறி மக்களை ஏய்ப்பதா என்று கேட்கவேண்டிய சங்கடமான நிலை ஏற்படுவதை நினைக்க மிகவும் வருந்துகிறோம். தோழர் பட்டாபி அவர்கள், சுவற்றின்பேரில் பூனையாக, இப்படியோ அப்படியோ என வாக்குகளுக்கு எதிர்பார்த்து நின்ற காலமாகிய தேர்தலுக்கு முன் தினங்களில், “இவ்விதமாகாண பிரச்னையின்பேரில் நான் நிற்கவில்லை. இவ்வித பிரசாரமும், பிச்சையெடுத்தலும் காங்கிரசின் கௌரவத்தைக் குறைப்பதாகும்.” என்று பட்டவர்த்தனமாக, ஆண்மையுடன், அறிக்கை விடாதிருந்ததின் காரணமென்ன என்றுதான் கேட்கிறோம். இது விஷயத்தில் தோழர் காளா வெங்கட்ட ராவ் அவர்கள் திறந்த மனதுடன் உண்மையை ஒத்துக்கொண்டு, தென்னாட்டவருக்கு நன்றி செலுத்தியதற்காக நாம் அவரை இவ்விஷயத்தில் மனமாரப் போற்றுகின்றோம். இந்த நல்லறிவும், நாணயமும், பிர தலைவர்களுக்கு ஏற்படும் நன்னாளையே எதிர்பார்க்கின்றோம். தென்னாட்டினரின் ஆதரவு இல்லாமல் இருந்திருந்தால் “ஒரு தரம் தோற்றால் மூன்றுதரம் தோற்க வேண்டும்.” என்று தனக்குத் தானேசமாதானம் செய்துகொண்டு பஞ்சாங்கத்தையும் படுக்கையையும் சுருட்டிக்கொண்டு, மூலை சேர்ந்து முக்காடிட்டு, தனிப்பட்டு, தேம்பித் தேம்பி அழவேண்டிய நிலைதான் ஏற்பட்டிருக்கும் எனச் சொல்வதற்கு இல்லாமலில்லை. அதனால் போனது போகட்டும், இனியாவது “உண்ட வீட்டுக்கு இரண்டகம்” என்ற அபவாதத்தை ஏற்றுக் கொள்ளாமல் உண்மையை ஒத்துக்கொண்டு உள்ளத்தில் நினைந்து, ஒளிமறைவில்லாமல், தூய மனதுடன் இத்தென்னிந்தியருக்கு நன்றி செலுத்துவார் என்றே எதிர்பார்க்கிறோம். பணிவாகக் கேட்டுக்கொள்ளுகிறோம். காங்கிரஸ் தலைவர் என்ற ஒரே காரணத்தினால்தான், இப்பணிவுடன் கேட்டுக்கொள்ளும்படியான நிர்பந்தம் எமக்குள் ஏற்படுகிறது.

பட்டாபி அவர்கள் வெளியில் அகிலமெனப் பேசினாலும், தெலுங்கு நாட்டின் பிரிவினையைக் கிளப்பியரும், ஆதரித்தவரும், அனுதாபம் கொண்டிருந்தவரும், அல்லும் பகலும் அதற்காகவே பாடுபட்டுவருபவரும், கனாக்கண்டு வருபவரும் அவரே என்பதை நாங்கள் சொல்வதல்ல, ஆனால் பிரபல “மெயில்” பத்திரிகை சொன்னதேயாகும். “சோழியன் குடுமி சும்மா ஆடுமா” என்ற பழங்காலத்துச் சொல்லை மெய்ப்பிக்கும் வகையில்தான் பிரகாசம்காருவும் பரிந்தெடுத்து பரிதாபத்துடன், பல்லெல்லாம் வெளித்தெரியக்கேட்டுக் கொண்டார். தோழர் பட்டாபியும் ஒரு பார்ப்பனராக இருக்கத் தானே பார்ப்பனப் பத்திரிகைகளும்ஒருமுகமாகப் பாடுபட்டன! போட்டியைக் கேட்டதும் பார்ப்பனர் உயிரிருந்தும் நடைபிணங்களாகவும் வீடுகள் இழவு வீடுகளாகவும்காட்சியளித்தனவே. இப்பரிவு மற்ற திராவிடர் விஷயத்தில் ஏற்படுமா? ஏற்பட்டதுண்டா என்றுதான் சிரம் வணங்கி கேட்கிறோம்.

கேவலம், சேதிகள் பிரசுரிப்பதிலும் படங்கள் போடுவதிலுமே மலையளவு வித்தியாசங்காட்டிவரும் பார்ப்பனப் பத்திரிகைகள் எவ்வகையிலும் திராவிடர் விஷயத்தில் நாணயத்துடனும் பத்திரிகை தருமம் என்ற கடமையிலும் பணியாற்ற முற்படும் என நாங்கள் எதிர்பார்த்தால் பரிகாசத்திற்குரிய பைத்தியக்காரர்களாவோம. இதைபற்றியும் கவலை கொள்ளவில்லை; “தன் கையே தனக்குதவி” என்ற பாடத்தை ஒவ்வொரு திராவிடனும் நல்ல வண்ணமே, சந்தேகமற கற்றுக்கொண்டிருக்கிறார். மௌடிகமாய் மமதையுடன் வீற்றிருந்த காலம் மாறிவிட்டது. இதை யறியாத திராவிடன் இது காலத்தில் கிடையாது. எம் அருமைக்கும் பெருமைக்கும் உரிய திராவிடர்? நடத்தும் “தினசரி” செய்தித்தாளும் சீக்கிரமே திருந்தி, செய்ய வேண்டிய பணியைச் செவ்வனே தயக்கமின்றி செய்ய முன்வந்து, நற்பெயருடனும் வழிகாட்டும் (சந்தேகம்) திறமையுடனும் விளங்குமென்று எதிர்பாக்கின்றோம்.

அப்படி யிருந்தும் இதையெல்லாம் அறிந்திருந்தும் தோழர் பட்டாபி விஷயத்தில் “பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார்” என்ற வித்தியாசம் எள்ளளவும் இல்லாமல் எல்லாத் திராவிடர்களும் ஒரு முகமாகவும் ஒற்றுமையாகவும் ஆதரவளித்தது திராவிடரின் எதார்த்த புத்தியையும் அரசியல் ஞானத்தையும் பகுத்தறிவின் விசேஷத்தையும் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் சக்தியையுமே எடுத்தும் காட்டுகிறதா இல்லையா என்று தான் கேட்கின்றோம். இவ்வறிவு பெற்றபின் இவ்வாற்றல் பெற்றபின், இத்துணிவுகொண்டபின் ஏய்த்து வந்தவரின் இரகசியமெல்லாம் வெட்டவெளிச்சமாக வெளித்தோன்றியபின் காங்கிரஸ் தலைவரான தோழர் பட்டாபி அவர்கள் திராவிடர் விஷயத்திலும் தென்னாட்டு விஷயத்திலும் குறிப்பாக தமிழ்நாட்டு விஷயத்திலும் இன்னும் குறிப்பாகவும் முக்கியமாகவும் திராவிடகழகத்தினரின் விஷயத் திலும், காந்தியார் கொண்டிருந்த கொள்கைக்கு நேர் விரோதமாகக் கேவலப் படுத்தப் பட்டுவரும் இஸ்லாம் தோழர்கள் விஷயத்திலும் ஏதொரு உரிமையும் சமத்துவமும் இல்லாமல் விலங்குகளுக்கும் கேடுகெட்ட நிலையில் வாடி வதங்கி நாளுக்கு நாள் தேய்வுற்று முகம் வெளுத்து பரிதவித்து நிற்கும் ஏழைத் தொழிலாளர் இரவு பகலெல்லாம் உழைத்து நடக்க சக்தி அற்று தெம்பற்ற கீழ்தர உத்தியோகஸ்தர்கள், ஆதிதிராவிடர் (ஹரிஜனம்?) முதயோர் விஷயத்திலும் எவ்விதம் நடந்துகொள்ளப் போகிறார் என்பது ஒருபுறமிருக்க, அவசரத்தாலும், ஆத்திரத்தாலும் புகுத்தப்பட்ட திட்டங்களினால் ஏற்பட் டிருக்கும் தொல்லைகளையும் பல்வேறு சிக்கல்களையும், எல்லாவற்றைக் காட்டிலும் முக்கியமாகவும் முதன்மையாகவும், நீர்வளம் நிலவளம பொருந்தியதென்றே பலகாலும் புகழப்பட்டுவந்த இந்நாட்டில் இப்போதைக்குத் தலைவிரித்தாடும் பட்டினிக் கொடுமையையும இதற்கு இணைந்தாற்போல, சர்க்காரவர்களின் மதுவிலக்குத் திட்டத்தால்வேலையிழந்து தயிக்கும் மரமேனும் சமூகத்தினரின் அல்லல்களையும் உடனடியாகத் தீர்த்துவைக்க வேண்டியது கடமையினும் முதற்

## மாகத்மாஜீயின் இருகண்களுக்கும் ஊனமா?

உலக உத்தமர் மகாத்மா காந்தியடிகளின் இரு திருக்கண்களாக விளங்கியவை ஹரிஜன முன்னேற்ற சேவையும், கதர் அபிவிருந்தித் திட்டமுமென்பது உலகறிந்ததே. இப்போதோ, நமது தேசத்தந்தையின் இந்த இருதிருக்கண்களுக்கு- அதுவும் அந்த விருகண்களும் ஒளி பெறச்செய்த முதலிடமான நம் மாகாணத்திலேயே, ஊனம் விளைந்து விட்டதோ வென்று அஞ்ச வேண்டிய—கவலை கொள்ளவேண்டிய—மனம் நொடியவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டதோவென சந்தேகிக்கவேண்டியிருக்கிறது. இதற்கு ஆதாரமெங்கே என கேட்கலாம். எட்டத்தேடி அலையவேண்டியதில்லை. இதே சென்னை சட்டசபையிலே, மந்திரியார் பேட்டியிலே காணக் கிடைக்கிறது.

அண்மையிலே கீழ்ச் சட்டசபையிலே, தோழர் முனிசாமி பிள்ளை கேட்டார்; "ஹரிஜனங்கள் நலனுக்காக ஒதுக்கிய பணத்தின் கதியாதாயிற்று, செய்தவேலைகளென்ன" என்று. தோழர் முனிசாமி பிள்ளை, மாஜி காங்கிரஸ் மந்திரி—காங்கிரசிலே நெடுநாளாகத் தொடர்பு கொண்ட தியாகிகளில் ஒருவர். இத்தகையவருக்கே, அந்த வேலைகள் 'மாயாரூப' மாகக்காட்சியளிக்குமானல், காங்கிரசின் எதிரிகள் என்றும், ஆட்சியாளரைக் குறை கூறுபவர்களென்றும் கூறப்படுபவர்களின் கண்களுக்கு இந்த "ஹரிஜனசேவை"யின் பலாபலன்கள் எவ்விதம் தென்படும்? எக்ஸ்ரே புகைப்படமெடுத்துக் காட்ட வேண்டிய நிலைமை அல்லவா ஏற்படும்? தோழர் முனிசாமி பிள்ளை இந்த மந்திரிசபையைக் குறை கூறும் பண்பினரோ, கரிப்பவரோ அல்லவே. இதற்கு மந்திரியார் அளித்த பதிலென்ன? "நடப்பதெல்லாம் நடக்கிறது" என்ற போக்கில்தானே இருக்கிறது. மந்திரி சபையார் கேட்கக்கூடும் 'மதுவிலக்குத் திட்டத்தை விட சிறந்த ஹரிஜன சேவாத் திட்டம் வேறுவிருக்க முடியுமா' வென்று நாமும் ஒப்புக்கொள்கிறோம் இது தலை சிறந்த நலத்திட்டம்தான் என்று.

ஆம், தடையில்லை இதில். நகர சுத்தித் தொழிலாளர்களும், மூட்டை தூக்கிகள் வண்டி யிழுப்பவர்கள், ஆலை தொழிலாளர்களுமாக இருக்கும் ஹரிஜனங்கள் தங்கள் சம்பாதியத்தில், முக்காலுக்குமேல் மதுவில் கரைத்து தங்கள் குடும்ப வாழ்க்கையையும் கரைத்து வந்தார்கள் என்பதும், இப்போது, அந்த "குடும்ப பாதக" வேலையிலிருந்து அவர்கள் மீட்கப்பட்டு, இல்லறத்தின் நல்லறத்தை உணரவழி செய்யப்பட்டதென்பதும் உண்மையே! ஆனல் அவர்களில் சிலர் கேட்கின்றனரே கள்ளில் போட்டகாசு இப்போது மிச்சமாகிறது மெய்தான்- ஆனல் அதனல் எங்களுக்கு என்ன பிரமாதமான நன்மையும் வசதியும் ஏற்பட்டு விட்டது? வயிற்றுப் பாட்டிற்குக், கால் வயிற்றுத் தான்யம்தான் அளந்து கொட்டுகிருர்கள். உடலலங்காரமென்ருலோ துணிமணிகள் குதிரை விலை யானைவிலை யிருக்கிறது. வீடு வாசல் தோட்டம் துரவு வாங்கலாமென்ருலோ, இவைகளுக்காகும் பணத்தைக்கொண்டு ஒரு ஊரையே முன்னர் வாங்கிவிடலாம் போலிருக்கிறதே. இவ்விதம் கைமேல் பலனளிக்காத பணத்தை வைத்துக் கொண்டு என்னசெய்வது முளைக்கப்போடுவதா" என்று.

இதற்கென்ன பதிலளிப்பது மற்றும் சில அனுபவசாலிகள், மதுவிலக்கால் எங்கள் ஊக்கமும் உரமும்விலகிவிட்டதே-- வேலை செய்ய தெம்பில்லையே! என்று கவலையோடு கேட்கின்றனர். இது வீண் கவலை—பிரமை. 'தெம்பு' இருக்கிறதே தேநீரில். அதிலும் சிறப்பாக இருக்கிறதே புளித்த பழஞ் சோற்று நீரில்—கம்புச்சோற்று நீரில்—புளித்த மோரில். எனவே, தொழிலாளத் தோழர்கள் தெம்புக்காக ஏங்கித் தேம்பவேண்டியதில்லை. வயிருற உண்ண வுணவும், உடுக்க மலிவான உடையும் கிடைக்கச் செய்வது ஆட்சியாளரின் முதற் கடமைஎன்பதை நாம்சுட்டிக்காட்டத்தேவையில்லை. இத்துடன், வெள்ளையரிடம வேலை செய்த லட்சக்கணக்கான ஹரிஜனங்கள் வேறு இப்போது வேலையின்றி தவிக்கின்றனர். இவர்களுக்கும் வாழ்க்கை வசதி செய்தாகவேண்டும்.

இந்த சேவைக்காக—ஒரு தனி மந்திரி—அதுவும் ஹரிஜன மந்திரி இருந்தும் அவ்வினத்தைச் சேர்ந்த ஒரு சட்டசபை உறுப்பினரே கவலை கொள்ளும் நிலைமை ஏற்பட விட்டிருப்பது வருந்தத் தக்கதும் ஒருவகையில் தலையிறக்கம் தருவதுமென்றுதான் எண்ணவேண்டியிருக்கிறது. மகாத்மாவைப் பறிகொடுத்த துக்கம் இன்னும் மறைந்தபாடில்லை. அப்படியிருக்கையில் அவருடைய கண்களான இந்த ஏழைகளின் முன்னேற்றத்திலும் அசிரத்தை காட்டப்பட்டு விட்டதென்று தெரிய நேரிட்டால் நாட்டுப் பற்ருளர்களின் மனம் என்னபாடுபடும் என்பதை நாம் ஆட்சியாளர்களுக்கு எடுத்துக் காட்டத் தேவையேயில்லை.

இதுதான் இப்படியாயிற்றென்ருல், மற்ருெரு கண்ணன கதர் திட்டத்தின் கதியை, எண்ணிஞலே மனம் கலங்குகிறது.

கதர் இலாகா மந்திரியார் தோழர் குருபாதம், அண்மையிலே சென்னை வட்டார கதர் ஊழிய முகாமிகளை வரவழைத்து, கருத்தை அறியமுற்பட்டார். மாஜி மந்திரி, ராஜாபாளையம் திரு குமாரசாமி ராஜாவும், கோவை அய்யாமுத்துவும் ஆந்திரநாட்டுத் தோழர் ஒருவரும் கதர்த்தொழிலின் நிலைமையை விவரித்துச் சொன்னதைக்காண, ரத்தக்கண் கண்ணீர்தான் வடிக்க வேண்டியிருக்கிறது சர்க்காரின். அண்மைக் கதர்திட்டம் கதர்தொழிலைக் கரையேற்றுவதற்குப் பதிலாக கரைத்து வெள்ளத்தோடு விட்டு வருகிறதென்றுதான் இவர்களுடைய வாக்குமூலங்களால் வெள்ளிடை மலைபோல் தெரியவருகிறது. இந்தக் கதர் திட்டத்திலே கோடிக் கணக்கான ரூபாய்கள் அடுத்தடுத்து முடக்கப்பட்டு வருகின்றன.

ஆனல் இதுவரை இதனல் உருப்பட்ட பலனைக் காணேம். போட்ட பணத்தை நஷ்டமாக "சாமிக்கணக்கில்" எழுதிவைக்க வேண்டுமோ என்று அஞ்சும்படியாகி விட்டது. இதுவரை இக்கதர் தொழில் காங்கிரஸ் அரண்காப்பிலே, ஆட்சியாளர் முள்வேலிக் காப்பிலே வளர்ந்துவந்திருக்கிறது. இருந்தும் பொது வியாபாரிக்கும் தனி முதலாளிக்கும் இக்கதர் தொழிலிலே, வியாபாரத்திலே ஈடுபட அனுமதிதரப்பட்டு வந்தது. ஆனல் இப்போதோ சர்க்கார் பிறப்பித்த புதுச்சட்டம் என்ற மின்சாரம் இந்த முள்வேலியிலே பாய்ச்சப் பட்டுவிட்டது. தனிப்பட்டவர்கள் இந்தத் தொழிலில் ஈடுபட முடியாது செய்யப்பட்டு விட்டது. இதனல், கதர்தொழில் பெருக்கமடைந்ததா என்று கேட்டால், "இல்லையே" என்று இருகைகளை விரிக்கின்றனர் இந்த மூன்று கதர் முகாமிகள். கோவை அய்யாமுத்து திருப்பூர் அகில இந்திய கதர் நிலையக்காரியதரிசி. தோழர் குமாரசாமி ராஜா என்ருலே ராஜபாளையம் கதர்ராஜா என்று யாரும் சொல்வர். இவர்கள், மந்திரியாரிடம் இட்டமுறையென்ன? வியாபாரிகளைத் தடுத்ததினல் கதர் உற்பத்தி பெரும் அளவுக்கு நொடிந்து விழுந்து விட்டது என்பதே. இவர்கள் சிறந்த தேசபக்கதர்கள் கதர் சேவாதியாகிகள் என்பதில் சந்தேக முண்டா? இவர்கள் வியாபாரிகளிடம் கைமூடி கை மாற்று காணிக்கை பெறும் நபர்களென்று யாராவது கூறமுடியுமா? காங்கிரசுக்கும், மந்திரிசபைக்கும் விரோதிகளா? எனவே இவர்கள் வாய் வார்த்தை ஒவ்வொன்றும் உண்மை என்பதில் சந்தேக முண்டோ? கதர்க்கண்ணும் ஊனமாகி விட்டதே:

மந்திரி குருபாதம் சிறந்த கண் வைத்தியர்தான். கோவை வாசியாகிய நாமும் நன்ருக அறிவோம். ஆனல் இந்தக்கதர் கண்ணுக்கு ஏற்பட்ட ஊனத்தை நீக்குவதிலே அவருடைய திறமையைக் காட்டவேண்டியிருக்கிறது வெறும் ஸ்படிகக் கண்ணுடியால் பலனளிப்பதல்ல இது. கண்ணின் ஊனத்தை நேரடியாக நீக்கியாக வேண்டும்.

சர்க்காரின் சந்தை பேரப் பொறுப்பினல் விளையும் அல்லலுக்கு, நஷ்டக் 'கணக்கிற்கு, கதர் பேரமும் ஒரு முதல்தர எடுத்துக் காட்டாகி விட்டது வருத்தத் தக்கதுதான். நாம் வியாபாரிகளுக்காக, கொள்ளைலாப கருப்புமார்க்கெட் கொள்ளைக்காரர்களுக்காக வக்காலத்து வாங்கிக் கொண்டு பேசவில்லை. இந்த வியாபாரிகளால், ஒரு பிடி அரிசியோ, துண்டுத் துணியோ, ஒரு முழுக்கு எண்ணையோ சும்மா கிடைக்கப்போவதில்லை. காசுகொடுத்தாலும், சாயம் வெளுக்கும் துணியோ, வயிற்று வலி தரும்மக்கிய அரிசியோ, கண் கெடுக்கும் கலப்பட எண்ணையோ

---

## இது உண்மையா?

### குட்டிச்சாத்தானே அருள்புரிவாய்.

—:0:—

1. ஓமந்தூர் மாதிரி சபையின்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொஸ்டு வந்து சபையைக் கவிழ்த்து, இதே சபையிலிருந்து வெளியேறிய சிலரைக் கொண்டு மந்திரிசபையை மாற்றி அமைக்க, காங்கிரஸ் வட்டாரந்துக்குள்ளே, சதிவேலைகள் நடந்து வருகின்றன என்பது உண்மையா?

2. சமீபத்தில் நடந்தேறிய வாக்காளர்கள் கணக்கெடுப்புக்காலத்தில் ஒரே நபர், ஒரே விலாச விவரத்துடன் ஒன்றுக்கு மேற்கொண்ட பல இடங்களில் பதிவு யெய்து கொண்டிருக்கிருர் என்றும், இத் இத்தந்திரத்தை பலபேர் கையாண்டிருக்கிருர்கள் என்றும் உலவும் வதந்தி உண்மைய?

"குண்டாந்தடி"

---

கடமை என்பதை வற்புறுத்துவதுடன், தலைவர் அவர்கள் என்னது, எப்படி, எப்பொழுது செய்யப் போகிருர் என்பதையும்சற்றே பொறுத்திருந்துயார்ப்போம். ஏன் என்ருல் பரீட்சைசெய்யும் நிந்தனைக்காளாவோம்என்பதையும்அறிவோம். அது எமக்கு உடன்பாடு மல்ல. நாங்கள் அதற்குத் தயாராயில்லை. ஆதலால் வகுக்கும்வழி சரியேயிருந்தால் பின்பற்றவும் தயார் சேவை, செய்யவும் தியாகம் புரியவும் எவ்விதத்திலும் தயங்கோம் என்பதை தலைவருக்கு மாத்திரமல்ல, ஆட்சியாளருக்குங் கூட உறுதி கூறுகிறோம்.

எல்லாரும் இன்புற்றிருக்க வேண்டுமென்று நினைப்பதல்லாமல் எம்முள்ளத்தில் வேறொரு இரகசியமுமில்லை.

தான் கிடைக்கும்.

நாட்டுமக்களுக்கு—ஏழைமக்களுக்கு மலிவான துணி எளிதில் கிடைக்கவழி செய்யவேண்டும். கிடைக்கும் வழிகளை அடைக்கலாகாதென்பதே எமதுகோரிக்கை. துணிப்பஞ்ச காலத்திலே கதர் தொழிலை இந்த மின்சார முள் வேலிக் கம்பிச்சிறையிலடைத்து, கொல்லாமல் கொல்வது புத்தி சாலித்தனமாகாதென்பதைத் தான் நாம் எடுத்துக் காட்ட வேண்டியிருக்கிறது. இத்தகைய தொழிலிலும், சந்தை வியாபாரத்திலும் பொது ஜனங்களை நம்பித் தானாக வேண்டுமென்ற உண்மையையும் நாம் தாழ்மையுடன் ஆட்சியாளர்களுக்கு எடுத்துக் காட்டவேண்டியிருக்கிறது. இது எமது பொது நலக்கடமையாகிறது. எனவே, ஆட்சியாளர், எமது யோசனையைப் பொருட்படுத்த, அதிகாரடவி அனுமதிக்காவிட்டாலும் அனுபவசாலிகளான கதர்தியாகிகள் கூறிய உண்மையை யாவது ஆராய்ந்து பார்த்து மக்கள் நலமுறும் வழியில் நடந்துகொள்வார்களென்று எதிர் பார்க்கிறோம்.

குருட்டு பக்தி என்ற இருட்டிலே தடுமாறி மக்கள் நலனைப் பலியிடுவது, மக்கள் பிரதிநிதிகளின் கடமைக்கு உகந்ததாகாதென்பதையும் இறுதியாக சுட்டிக் காட்டி எச்சரிக்கிறோம். ஏழைகளின் காப்பாளரும், பாட்டாளிகளின் உண்மைப் பிரதிநிதியும், கிராமவாசிகளின் நலக் கோட்பாட்டினருமான கனம் ஓமந்தூரார் இனியாகிலும் இத்துறையில் உரிய கவனம் செலுத்தி "சத்திய சந்தர்" என்ற நற்பெயரை நீடித்துக் கொள்வாராக.

——: (x) :——

# ஒலிக்கிறது கேளீர்

## "உடுமலை பீரங்கி"

**(கரந்தை. த. கா. ஆறுமுகம்)**

அவனியே புகழ வாழ்ந்தார் அருந்தமிழர் அந்நாளில்
அவதியுறும் அவலவாழ்வில் அறிவிழந்தார் இந்நாளில்
ஒளிவீசும் முத்தும் உயரிய நற்பொருளையும் உலக்கு
[அளித்த மக்கள்

உடையும் உணவுமின்றி உருகுலைகின்றாரே - அந்தோ!
தரணியே திரண்டிட்டாலும் தயங்கிடாத் தமிழர் இனம்
தர்ப்பைப் புல்தாங்கிகட்கு தலைவணங்கும் தன்மைபாரீர்
புலியைத்தான் கண்ட பின்னும், போரென்று கேட்ட
[பின்னும்

புன்னகை புரிந்தமாந்தர் இன்று பூனைக்கு அஞ்சுகின்றார்
வெஞ்சினத்தால் வெகுண்டெழுவார் செந்தமிழைப்
[பழித்திட்டார்

வேற்றுமொழி விளம்பரம் பேசி இன்று வீணே திரிகின்றீர்
தேசியம் பேசிடும்எம் தேன்மொழிச் சீலர்களே!
தெரிந்தும் இவையெல்லாம் அவர்கட்கு பரிந்து நீர்
[பேசுகிறீர்

நாலுசாதி ஒழிந்தால் நம்நாடு செழிக்குமென்றால்
நாக்கிலே நரம்பின்றி நாத்தீகன் என்கின்றீர்!
கொள்ளையிட்டுக் கொடுத்து வாழும் குள்ளர்களோடு
[கூடி

குறைமதியாளரென்று கூப்பாடு போடுகின்றீர்!
போனதைப்பேசி இனி பொழுதைப் போக்கவேண்டாம்
பொய்யர்களின் புரட்டை ஒழித்து புதுஉலகைக்காண
[நீவிர்

வடநாட்டான் சுரண்டலையும் வாய்நுழையா இந்தி
[யையும்

வந்தவழியேதுரத்தி வண்டமிழின் மானங்காக்க
கட்சிபேதம் மறந்துவிட்டு கடமையைத் தன்கருத்தில்
[கொண்டு

கண்ணெனப் போற்றிடும் நம் தமிழ்க்கலையைக் காத்திடவே
வீணரின் வீண்சொல்லால் வீண்காலம் போக்கிடாமல்
வீர இன இளைஞரே! நீர்வீறு கொண்டு எழுந்திடவும்
உணர்விழந்து உறங்கும் மக்கள் உணர்ச்சிகொண்டு
[விழித்திடவும்

உழைக்காமல் உண்டுவாழும் உலுத்தர்களின் கூட்டம்
ஓடி ஒளிந்திடவும் உயிர்காத்துப் பிழைத்திடவும்
ஒலிக்கிறது உற்றுக்கேளீர் "உடுமலை பீரங்கி"

# இந்தியாவின் கௌரவம்

——: (o) :——

## பண்டித மாளவியாவின் கவலை

——: (x) :——

பம்பாய் அக் 20

காலஞ்சென்ற காங்கிரஸ் தலைவர் பண்டித மதன்மோகனமாளவியின், குமாரரும், மத்திய சட்டசபை உறுப்பினருமான பண்டித ரதிகாந்த மாளவியா, "மார்ச்" என்ற பம்பாய் ஆங்கில வாரத்தாளுக்கு விடுத்துள்ள தனிச் செய்தியில் குறிப்பட்டிருப்பதாவது:—

இந்தியாவின் மானம் சந்திக்கு வந்து விட்டது. கௌரவத்திற்கு பழுது நேரும் நிலைமை ஏற்பட்டுவிட்டது. இந்தியாவின் நல்ல பெயருக்கு ஊனம் இழைக்கப்பட்டிருக்கிறது. தலைமை பீடத்திலே உள்ளவர்கள், நேர்மையாகவும், குற்றம் குறைபாடு புகார்களுக்கு இடமில்லாமலுயிருக்க வேண்டுமென்பதே இந்த 30 கோடி மக்களின் நலனுக்கு இன்றியமையாதது. தலைமை பீடத்தார்கள், மக்களின் நற்பலனுக்காகத்தான் பாடுபட வேண்டும்.

கள்ளமார்க்கெட்டிலே, கொள்ளை லாபமடைந்து பணம் கொட்டிவைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு இந்த நாட்டுப் பொது வாழ்க்கையில் இடமில்லாதபடி செய்யவேண்டும் (அதாவது அவர்களைப் பொது வாழ்வில் கலந்து கொள்ளாது தடைப்படுத்தி வைக்கவேண்டும்—தீண்டப் படாதவர்களாக்கவேண்டும்) இப்போது நம் முன் நிற்கும் பெரும்பணி இதுவேயாகும். தேசபக்தன் என்று தன்னைக் கூறிக் கொள்ளும் ஒவ்வொருவரின் கடமையும் இதுவேயாகும். இப்போது இந்நாட்டுக்குப் பொதுவுடைமைக்காரர்களோ, சமதர்மவாதிகளோ தேவையில்லை. இவ்விரு கூட்டத்தினரும் எவ்வளவோ முயற்சித்துப் பார்த்தாயிற்று. இவர்கள் தோல்வி கண்டது தான் பலன். சமதர்மவாதிகள் மக்களின் கலாச்சாரப் பண்புகளுக்குகந்தவர்களல்ல. நம்நாட்டின் எதிர்காலம் பொதுவுடைமை வாதிகளிடமோ சமதர்மவாதிகளிடமோ இல்லை, ஆனால் பண்டைப்பெருமையில் பற்றுக் கொண்ட "மகாத்மாவின் காங்கிரசின்" பால், அன்புகொண்ட சாதாரண மக்களிடம் தான் இந்தியாவின் எதிர்காலமிருக்கிறது.


இப்போது ஆட்சி ஆதிக்கத்திலுள்ள கட்சியின் நிகழ்ச்சித் திட்டத்தில் மாற்றம் செய்வது தான் இப்போது தேவைப்படுவதாகும் சாதாரண பொது ஜனங்களுக்கு, பாமரமக்களுக்குப்பயன் தரும் வழிகளைக் கைக்கொள்ள வேண்டும். பெரும் பணமூட்டை வர்த்தக முதலாளிகள் கொழுக்கும் கோட்பாடுகள் ஒதுக்கப்படவேண்டும்.


(ஸ்தாபிதம் 1931.) டெலிபோன் 2597.

# B. R. & Sons.

33, திருவேங்கிட முதலித் தெரு,
பெரியமெட்டு, சென்னை 3.

பெரியமெட்டு சப்-ரிஜிஸ்தரா ராபீசுக்கு
அடுத்த மேல்புறத்துச் சந்து



★ எல்லாவித பத்திரங்களும் எழுதுதல்.
★ தமிழிலும் இங்கிலீஷிலும் டைப் அடித்தல்.
★ பத்திரங்களைப் பரிசோதித்து பாத்தியா பாத்தியங்களைத் தெரிவித்தல்
★ ரிஜிஸ்தரேஷன், ஸ்டாம்பு முதலிய தகவல்களை அளித்தல்.
★ சொத்துக்களின்பேரில் அடமானங்கள் ஏற்பாடு செய்தல்.
★ சொத்துக்களின்பேரில் கடன்கள் பெறல்,
★ கிரயங்கொள்வதற்கும், விற்பனை செய்வதற்கும்.

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் திறமைக்கும்
உண்மைக்கும் தகுந்த இடம் இதுவே.


# உடனே தேவை

——: (x) :——

பத்திரிகைக் காரியாலய அனுபவங் கொண்டவரும் டைப் அடிக்கத் தெரிந்தவருமான குமஸ்தா ஒருவர் உடனே தேவை.

நிர்வாகி உடுமலை பீரங்கி
பெரியமெட்டு சென்னை 3.

# முதலாவது ஹிந்தி மொழிப்போர்.

B. கணேசன்
B. A. (Honrs.)

[சென்ற வார தொடர்ச்சி]

சென்னை மாகாணத்தில் தோழர் ராஜகோபாலாச்சாரியார் தலைமையில் காங்கிரஸ் மந்திரிசபை ஆட்சி பீடத்திலமர்ந்து. எகாதிபத்திய, சாதி வெறி பிடித்த காங்கிரசின் வன்மையான பிரதிநிதி தான் என்பதை தோழர் சி. ஆர். அதிகார மேற்ற ஒரு சில நாட்களுக்குள்ளேயே காட்டி விட்டார். தேர்தல் காலங்களில் காங்கிரஸ் குறித்து பெரியார் செய்து வந்த பிரசாரங்களனைத்தும் உண்மையாகும் தன்மையில் நடந்து கொண்டார் சி. ஆர். பதவியேற்ற சின்னுட்களுக்குள்ளேயே தேசிய காங்கிரசிடம் பொதுமக்களுக்கு பெருத்த அதிருப்தி யேற்பட்டது. பெரியாருக்கும் நிறைய கவலை வைத்தது சென்னை மாகாண காங்கிரஸ் மந்திரிசபை.

ஆரியம் இந்த நாட்டில் புகுந்தநாள் அன்று தொட்டு தமிழர் சிறுக சிறுக வளமிழந்து வந்திருக்கின்றனர். தமிழரின் பண்டைச் சிறப்பியல்புகள் பல வகையிலும் மறைந்து வந்திருக்கின்றன. தமிழனது தனித்தன்மையில் மாசு ஏற்பட்டு வந்திருக்கிறது. தமிழர் நாகரிகம்; தரணி வியக்கும் நாகரிகம் பழுது படலாயிற்று. அதிகம் போவானேன். தமிழன் தன்மானம் பறிக்கப்பட்டு வந்திருக்கிறது.

தமிழன் பெருமையுறும் வகையில் ஆரியம், ஒன்றைத் தான் ஓரளவு விட்டு வைத்தது. அதுதான் தமிழ்மொழி. தமிழும் படாத பாடுபட்டிருக்கிறது நயவஞ்சகர்களால். எனினும் அதனது தனித் தன்மைக்குலைத்துவிட அவ்வளவுஎளிதில் இயலவில்லை அவர்களால். தனது முன்னோர் அரைகுறையால் விடுத்துச் சென்ற செல்வத்தை யழித்தொழிக்கும் வேலையை, தமிழினத்தை அடியோடு நசுக்கிஒழிக்கும் வேலையை மேற் கொண்டார் ஆரியப் பிரதமர் சி. ஆர்.

காங்கிரஸ் மாட்டு பேரார்வங் கொண்டு பிரபல தென்னாட்டுக் காங்கிரஸ் தலைவராக இருந்த காலத்திலும் பெரியார் இந்தி மொழியை இந் நாட்டில் புகுத்த வடநாட்டுத் தலைவர்கள் செய்து வந்த சூழ்ச்சிகளை வெளிப் படையாகக் கண்டித்தவராவார். இந்தி நுழைவினுல் தமிழின் சிறப்பு கெடுவதோடு தமி*னின் தன் மானமும் சிதைவுறுமென விளக்கியவராவார்.

குடியரசுப் பத்திரிகையில் அடுத்தடுத்து வடவர் முயற்சியைக் கண்டித்து ஆணித்தரமாக எழுதிவந்தவராவார். பல்வேறு காங்கிரஸ் மாநாடுகளில் இந்தியினுல் வரும் கேடுகளை ஆதாரப் பூர்வமாக விளக்கியவராவார்.

அத்தகைய தமிழர் தன் மானக்கவலை வறிதே வாய் புதைந்திருப்பார், ஆரியத் தலைவர் சி. ஆர். சிம்மாசனத்தில் இந்தியைப் புகுத்த சட்டமியற்றிய வேளையில்? தமிழ்மொழி சீர்கெடுமேல் தமிழினமே கெட்டொழியுமென்ற கோட்பாடுடையவர் பெரியாராகையால் தமிழினத்தின் உயர்வே தனதுவுயிர் எனக்கருதியவர் பெரியாராகையால். சி. ஆரின் போக்கை நியாயமாய் எதிர்த்துப் போராட வேண்டிய பண்டிதர்கள் ஒதுங்கி நிற்கவும், தானே தனது கட்சியின் சார்பில் பிரதமரின் தீச்செயலைக் கண்டிக்க முற்பட்டார்.

சென்னை மாகாண மாணவர்களனைவரும் கட்டாயகாக இந்தி மொழியைப் பயிலவேண்டுமென்பதே சி. ஆர். பிறப்பித்த சட்டம்.

அத்தகைய சட்டம் பிறப்பிப் பதற்கு அவர் பற்பல காரணங்கள் தந்தார். பல்வேறு மொழிகள் பேசப்படும் இந்தியாவில் பொது மொழியொன்று அடைய வேண்டியது அவசியமென எடுத்துக கூறினர். எதிர்கால இந்திய அரசியலுக்கு ஒரு தனிமொழியிருக்க வேண்டியது இன்றியமையாத தாகுமென குறிப்பிட்டார்.

தென்னுட்டார் வியாபார நிமித்தம் வடஇந்தியாவுக்கு செல்ல நேரிட்டால் அங்கு பயிலப்படும் இந்திமொழி இவர்களுக்கும் தெரிந்திருக்க வேண்டியது கட்டாயமென விவரித்தார். மொத்தத்தில் இந்தியனுக்கு இந்திமொழிப் பயிற்சி வேண்டற் பாலதென தனது நோக்கத்தை விளக்கினுர்.

காரணம் வேறு. மனு நீதி வழங்கிய பரம் பரையில் வந்த சி. ஆர். அர்த்த சாஸ்திர சாணக்கியரைக் காட்டிலும் எவ்விதத்திலும் பண்பாட்டில் குறைந்தவதல்லர். இருபதாம் நூற்றூண்டைய சாணக்கியரெண்றே கூறலாமவரை. தமிழகத்தில் இந்தியைப்புகுத்த சி. ஆர் முயற்சித்தார், சட்டஞ் செய்தாரென்ருல் தமிழ், தமிழர், தமிழ் நாட்டின்மீது ஆரியம் வேற்றுருவில் படையெடுக்க முற்பட்டதென்று தான் பொருள். வரலாறு தெரிந்தகால முதற்கொண்டு ஆரியம் அவ்வப்போது ஒவ்வோருருவில் படையெடுத்துத் தன்னாலானவரை சாதித்துக் கொண்டுதானிருந்திக்கிறது இந்நாட்டில். அல்வப்போதுஅதற்கு எதிர்ப்பு இல்லாகலிருக்கவில்லை. எனினும் அவ்வெதிர்ப்பு சக்திகளெல்லாம் ஆரியத்திற்கு வளைந்து கொடுத்து விட்டன. ஆனுல் பெரியார் சகாப்தத்தில் ஆரியப் பாம்பினுல் அதிகம் ஆட இயலவில்லை.

இந்தி எதிர்ப்போர் முரசு நாடெங்கும் கொட்டப் கட்டது. கண்டனக் கூட்டங்கள், ஊர்வலங்கள், மாநாடுகள் கணக்கின்றி நடைபெற்றன. நூறுபேர் கொண்ட தமிழர் பெரும்படையொன்று ஆச்சாரியாரின் போக்கைக் கண்டிக்கும் முறையில் திருச்சியிலிருந்து புறப்பட்டு கால் நடையாக சென்னை வந்து சேர்ந்தது. வழியில் முக்கிய ஊர்கள் தோறும் மாபெரும் வரறவேற்புகளுக் கிடையே பொது கண்டனக்கூட்டங்கள் நடைபெற்றன. தொண்டுக் கிழவர்களைக்குருதி பாயும் குமரர்களாக்கியதோடு கோழைகளை வீரர்களாக்கியது இந்தி எதிர்ப்புப் போராட்டம்,

ஆயிரத்துக்கு மேற் பட்ட ஆடவர், பெண்டிற் மூத்தோர், குழவியர் ஆச்சாரியான் முயற்சியை வெளிப்படையாக, ஆட்சேபித்து சிறைத் தண்டனை பெற்றனர். கண் பஞ்சடைந்த ஆனுல் கருத்தில் இளைக்காத நரை மூதாட்டிகள், இரண்டு மூன்று மாதங்கட்கு முன்னர் தான் சேய்களைப்பயந்த தாயார்கள், கர்ப்பத்தாய்மார்கள், பல்கலைக் கழகப் பட்டப் பெற்றதினுல் பதவி வேட்டையில் நாட்டமில்லா நல்லிளைஞர்கள்,

# செய்தியும் சிந்தனையும்!

## வடநாட்டில் காமராஜ் காவடி

புது டில்லி வந்திருக்கும் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜ் நாடார், 16-ம் தேதி ரயில்வே மந்திரி திரு. கோபால்சாமி அய்யங்காரைக் கண்டு, பிரஞ்சிந்திய முனிசிபல் தேர்தல் பற்றி கலந்து பேசினுர்.

• • • • •

சென்னை ஆரஞ்சுப்பெட்டி ஆதரவு வீரரும், ஐக்ய நாடுகள் சபையில் "காஷ்மீர் பிரச்னை வழவழா" வீரரும் பிரஞ்சிந்திந்திய தேர்தலிலும் "வெற்றிகரமான வாபஸ்" பற்றிக் கலந்து பேசினர் போலும்.

## அழைப்பும் விரைப்பும்

தமிழ்நாட்டுக் காங்கிரஸ் தலைவர்16-ம் தேதி இந்திய சர்க்கார் துணைப் பிரதம மந்திரி சர்தார் பட்டேலைக் கண்டு பேசினுர். சென்னைக்கு விஜயம் செயும்படி திரு. காமராஜர் சர்தாரை அழைத்ததாகத் தெரிகிறது. தற்போது, தமக்கு அதிக அலுவல்கள் இருப்பதாகவும் சென்னைக்கு விஜயம் செய்வது பற்றிப் பின்னிட்டுத்தாம் யோசிப்பதாகவும் பட்டேல் கூறினுர்.

• • • • •

தென்னுட்டு காங்கிரஸ் தலைவர், வடநாட்டுக்குத் தேடிப் போனுலும் தேடுவாரில்லை, வடநாட்டுத் தலைவர்களை வருந்தியழைத்தாலும், அவர்கள் பணியா" பேராக்கிராக்கிராக்கியை விடுவதில்லை காந்தியடிகள் வரவேற்பிலும், கவர்ளர் ஜெனரல் ராஜாஜி வரவேற்பிலும் தோழர் காமராஜர் முகத்தில் தீட்டிய கரி வேஷம்" கலைந்து விட்டது போலும்.

## காங்கிரஸ் ராஷ்டிரபதிக்கு தங்க முகப்புப்படாம்.

ஜெயப்பூரில் நடக்கும் காங்கிரஸ் மகாசபையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் படுபவர், தங்கம் வெள்ளியாலான "பாட்ஜ்" அணிந்திருப்பார். அதில் அசோகர் ஸ்தூபி சிங்கங்களும், ராஷ்ட்ரபதி என்வ பெயரும் பொறித்திருக்கும்.

• • • • •

ஏழைகள் கட்சியான காஙகிரஸ் தலைவர் 'ராஷ்டிரபதி' (வடநாட்டு ஆட்சித் தலைவர்) யானம்து, மேடைக்குத்தகுந்த வேடம் வேண்டாமா? இனி, வெள்ளை; காவி முரட்டுக் கதருடைக்குப் பதில் சுதேசி பட்டினுல் ஆன, தனித் தர்பார் உடையும் தேவையாகலாம். கால்நடை பிரயாணியாகவிருந்ததோழர் கிருஷ்ண மேனனுக்கு ரோல்ஸ்ராய்ஸ் கார் சவாரி கிடைத்துள்ளபோது, ஆட்சியாளரை ஆட்டுவிக்கும் சூட்சமக்கயிருன காங்கிரஸ் தலைவர்மட்டும் என்ன இளப்பமா?

## 80 நிமிஷங்களில் உலகம் சுற்றிவரலாம்.

பிரிட்டிஷ் விமானப் போக்குவரத்து மந்திரி யிலாகா சிப்பந்தியாக பீட்டர் மாங்யூல்டு என்பவர் விமானசங்கத்தில் பேசுகையில், பம்பாயிலிருந்து பகல் 12 மணிக்குப் புறம்பட்டு 80 நிமிஷங்களில் உலகைச் சுற்றிக்கொண்டு, 1-20 மணிக்கு மீண்டும் பம்பாயைச் சென்றடையும் அதிவேக விமானங்கள் போக்குவரத்து எற்பட்டுத்தான் தீர வேண்டுமென்ருர்.

• • • • •

உடலுறுதியோடு உள்ளவுறுதி படைத்த வாலிபர்கள் மற்றும் எண்ணிறந்த பலர் ஆச்சாரியார் சர்க்காரின் விருந்தினராயினர். (தொடரும்)

நம்ம விஞயகர் தகப்பஞனை சிவபெருமான் கட்டளைப்படி ஒரு நிமிஷத்தில் உலகைச் சுற்றி தகப்பனுர் தந்த பழத்தைப் பெறவில்லையா என்று கேட்கிருர் விஞயக மகாத்மிய பௌராணீகர்.

## தொத்து நோயாளிக்குத் தனியிடம்

தொத்து நோயாளிக்குத் தனி ஆஸ்பத்திரிகள் கட்டி நடத்தும்படி மாகாண சர்க்கார் முனிசிபாலிட்டிகளுக் கெல்தாம் அறிவித்திருக்கின்றனர்.

• • • • •

இதைக்கண்டு பிராமணர்கள் அகங்கள் தனித்திருப்பது என் என்று கேள்வி போடுகிருன், சுட்டிப்பயலான சிறுவன், (தொடரும்.)

## ரெயில் நேரம்

எழும்பூர் (மெயின் லைன் வழி)

| | புறப்பாடு | வருகை |
|---|---|---|
| இண்டோசிலோன் | | |
| எக்ஸ்பிரஸ் — | மாலை 8-55 | காலை 6-50 |
| செங்கோட்டை | | |
| பாசஞ்சர் — | காலை 7-30 | மாலை 7-00 |
| திருவனந்தபுரம் | | |
| பாசஞ்சர் — | மாலை 9-35 | காலை 5-40 |
| மதுரை | | |
| பாசஞ்சர் — | மாலை 11-25 | காலை 5-10 |

எழும்பூர் (கார்டு லைன் வழி)

| | | |
|---|---|---|
| தனுஷ்கோடி | | |
| பாசஞ்சர் — | காலை 10-30 | காலை 10-25 |
| திருவனந்தபுரம் | | |
| எக்ஸ்பிரஸ் — | மாலை 8-00 | காலை 6-20 |
| திருச்சி | | |
| எக்ஸ்பிரஸ் — | மாலை 10-35 | காலை 7-25 |

சென்ட்ரல்

| | புரப்பாடு | வருகை |
|---|---|---|
| புளுமவுண்டன் | | |
| எக்ஸ்பிரஸ் — | மாலை 8-10 | காலை 7-25 |
| கொச்சி | | |
| எக்ஸ்பிரஸ் - | மாலை 4-35 | காலை 10-40 |
| மங்களூர் | | |
| எக்ஸ்பிரஸ் - | மாலை 7-15 | காலை 7-30 |
| பெங்களூர் | | |
| பாசஞ்சர் - | காலை 7-15 | மாலை 8-45 |
| பெங்களூர் | | |
| பாசஞ்சர் - | மாலை 9-25 | காலை 5-35 |
| கல்கத்தா | | |
| பெயில் - | மாலை 7-45 | காலை 8-05 |
| பெங்களூர் | | |
| மெயில் - | மாலை 8-50 | காலை 6-20 |
| பம்பாய் | | |
| எக்ஸ்பிரஸ் - | மாலை 2-50 | மாலை 1-10 |
| பெங்களூர் | | |
| எக்ஸ்பிரஸ் - | காலை 12-45 | மாலை 3:30 |


உடுமலை பீரங்கி

சந்தா விவரம்

பிரதி சனிக்கிழமையும் வெளிவரும்,

| | | |
|---|---|---|
| தனிப் பிரதி | ரூ. | 0—1—0 |
| 6 மாதங்களுக்கு | ரூ. | 1—8—0 |
| 1 வருஷத்திற்கு | ரூ. | 2—8—0 |

6 மாதத்திற்குக் குறைந்த சந்தா இல்லை.

விளம்பர விகிதங்களுக்கு எழுதவும்.

காரியாலயம்

33 திருவேங்கிட முதலித் தெரு, பெரியமெட்டு. சென்னை, 3.

——: (x) :——

எல்லா ஊர்களிலும் கிடைக்கும்:

தொடர் கதை

# லக்ஷம் ரூபாய் நக்ஷத்திரம்

——: (o) :——

[ "பிவியார்" ]

மாலை மணி ஐந்தரை, அடிமைப் பட்டய உத்தியோகஸ்தர்கள் - சிப்பந்திகள், பிரித்த காகிதக் கட்டுகளை திறந்த புத்தகங்களை, கட்டி வைத்துவிட்டு, ஆபீஸ் சிறைக்கூடங்களைவிட்டு வெளிக் கிளம்புகின்றனர்.

அடிமைப் பணிவுத் தூசியைக் காரியாலய வாசலிலேயே தட்டிக் கழித்து விட்டு: சுதந்திர உலகத்திலே நுழைந்து விட்டவர்களைப் போன்று தலை நிமிர்ந்து மனமகிழ்ந்து, முகமலர்ந்து தெருவில் போவோர் வருவோர் மீதெல்லாம் கண் பாய்ச்சி, உல்லாச நடையிட்டுச் சென்று கொண்டிருக்கின்றனர். வீட்டுத் தேவியின் வரவேற்பையும், உபசரிப்பையும் எதிர்பார்க்க முடியாத சில அப்பாவி; ஆம்படையான்கள், பொது வுடைமை மாமியார் வீடான காப்பிகிளப்புகளையும் உல்லாச கிளப்புகளையும், சபைகளையும், நாடிச்சென்று உள்நுழைகின்றனர்.

சபைகளிலும், கிளப்புகளிலும், அரட்டைக் கச்சேரிகளுக்குச் சொல்லவா வேண்டும்? வீட்டில் தன் பரதேவதையின் முன்னரோ, காரியாலயத்தில் மேலதிகாரியிடமோ, வாயை நன்ருகத் திறந்து உரக்கப் பேசத்துணியாதவர்களும் கூட மாலைவேளை உல்லாச சபைகளிலே, அரட்டையிலே, சிரிப்பு முழக்கத்திலே, முதலிடம் வகிப்பது உலகறிந்த உண்மையல்லவா?

அதுவும் சாப்பிடுகையில் இடையிடையே, அவரவர்களுடைய, இல்லங்கள் இல்லறத்துணைவிகளின் அன்ருட நாடகங்கள் ஆகியவற்றைப் பற்றியும் நகைச்சுவை சல்லாபங்கள் நிகழும்.

"என்னங்கோ சார் ஆத்திலே அம்மாமிக்கு லீவோ"

என்று கிண்டலாகக் கேட்டுச் சிரித்தான் சந்திரன், தன் அண்டையிலேயிருந்து வாகு அல்வாவை, ஆசையோடு சுவைத்துக் கொண்டிருந்த, ஆசாரப்பனின் முகம்நோக்கி. அல்வாத்துண்டின், பசை அந்த ஆச்சாரப்பனின் வாயைத் திறக்க முடியாதபடி செய்து விட்டதால், அவர், ஓர் அசட்டுச்சிரிப்பு மாத்திரம் சிரித்து விட்டு, பல்லோடு, வாய் முகட்டோடு ஒட்டிக்கொண்டு உள்ளே போக மறுத்து சத்தியாக்கிரகம் செய்யும் அந்த அல்வாத்துண்டைத் தொண்டைக்குள் செல்லும்படி செய்ய பாடு பட்டுக் கொண்டிருந்தார்.

"எது காப்பிகிளப் பக்கம் அத்திபூத்த அதிசயம் போல் வந்தது? வீட்டுக் காப்புத்தேவதையுடன் எதாவது இன்பச் சீராட்டோ" என்று மற்ருெருவர், நையாண்டி செய்தார் பஞ்சநாதனைப்பார்த்தது.

தலைமை அதிகார பீடத்திலே அமர்ந்து, அமர்ந்துஅடி பருத்திருந்த பழனியப்பன் வாயில் குதப்பிக்கொண்டிருந்த தயிர் வடைத் துணுக்குகள், வெளியில் தெரிக்கும்படி, ஒரு அவுட் சிரிப்புச் சிரித்துத் "இல்லை" ரேஷன் போதாதிருக்கும் அதை சரிகட்டுகிருர் இங்கே" என்று வழ வழ கொழ கொழ அபிப்பிராயம் தெரிவித்தார்.

"எது, இன்றைக்கு ஒரு நாளுமில்லாத திருநாளாய், டிபன் பட்டியல் பலத்திருக்கிறதே? சம்திங் வருமானம் இன்று அதிகமோ" என்ருர் வயிற்றெரிச்சல்கார வைத்திய நாதர், பொருமையும் விஷமமும் ததும்பும் குரலிலே.

"உங்கள் வுட்பீ ஏஞ்சல், காத்திருக்குமே, கல்லூரிக்குப் பக்கத்தில், உங்களை எதிர்பார்த்து. இவ்வளவு தாமதம் செய்தால், அவர்களுக்குக் கோபம் தாபம் அழுகை எல்லாம் வந்து விடாதா"

என ஒரு அவுட் வெடியைத் தூக்கி எறிந்தான் நித்திய பிரம்மச்சாரியான நித்தியானந்தன். காதல் வேட்டையில் புதுப்பழக்கமுடைய, குமாரனை சுக்கிரமணியனை நோக்கி. சுக்கிரமணியனே, நித்தியானந்தன்மீது ஒரு கோபத் தணல் கோணல் பார்வையைச் செலுத்தி உறுத்துப் பார்த்துவிட்டு, தலையைக் கவிழ்ந்து கொண்டான். மற்ற நகைச்சுவை, கேளிகா ரசிகர்களுக்கோ அந்தப் பேச்சையும் அந்தக் கோணல் பார்வையும் கண்டதே, சிரிப்பு வாயைப் பொத்துக்கொண்டு வந்தது. குமரன் சுக்கிரமணியனே, வெட்கமும். கோபமும் கொண்டு தத்தளித்தான். முகத்திலே, உடலெங்கும் வியர்வை வெள்ளமெடுத்தது. சட்ணியும் சாம்பாரும் ஒட்டிக் கொண்டிருந்த கையை ஆத்திர மறதியால் சடக்கெனத் தன் சட்டைப் பைக்குள் விட்டு; தன் காதலி, தன் பொன்னன கரங்களால், பூப்போட்டு, தன் பெயர் குறி எழுத்துக்கள் பின்னி, அன்பளிப்பாக, நினைவுக்குறியாக அளித்த அந்தப் பட்டுக் கைத்துணியை எடுத்துத் தன் முகத்தைத் துடைத்துக் கொண்டான். காதல் சோலையிலே, புதிதுபுதிதாகப் புகுந்து, இரகசிய, வேட்டை இப்போதுதான் தொடங்கிய தொடக்க மாணவனுகையால், சுக்கிரமணியனுக்கு வெட்கம் பிடுங்கித்தின்கிறது. அத்துடன் கையிலொட்டியிருந்த சாம்பாரும் சட்ணியும் அந்தக் கைத்துணியிலே ஒட்டி முகத்திலும் ஒட்டிக் கொண்டன. தன்குட்டைக் கெடுத்தானே இந்தப்பயல் நித்தியன் என்ற மனவெரிச்சலுடன், சட்ணி மிளகாய் எரிச்சலும் முகத்தில் எற்படடவே, அவன் கண்ணீரும் கம்பலையும், ரெயில் இஞ்சின் மூச்சுமாய் அவ்விடத்தை விட்டு விரைந்தகன்ருன். மற்ருேரின் சகலவாத்தியம்போன்ற பெரும் சிரிப்பு அவனுக்கு விடைகொடுத்து விரைந்து வெளியிலனுப்பித்தது. அடுத்த உரையாடல் கட்டம் அங்கு ஆஜரில்லாத நபர்களைப்பற்றி தொடக்கமாயிற்று.

"அதுசரி, நம்ம காக்ஷியர் காமாட்சிச் சுந்தரன், எங்கே? கொஞ்சநாளாக இங்கே காணப்படுவதில்லையே? எதாவது விபத்தில் பட்டு மருந்து சாப்பிடுகிருனே?

என்று உரையாடலைத் தொடங்கி வைத்தான் பேச்சியப்பன்:

"அவனு, அவன் இப்போதுதான் பேருக்குகந்தபடி திரு விளையாடல்காரனுகிவிட்டான். "பெண்டாட்டியாத்தாளே பெரியாத்தாள், உன்திருவடி சரணம் நானுச்சே" என ஆசை மனையாட்டிக்கு எப்போதும் திருவடி பூசை செய்யத்தொடங்கி விட்டானே. ஆபீஸ் நேரம்போக மற்ற நேரமல்லாம் அந்த கண்ணம்மாளின் கண்பார்வையிலிருந்து மறையாது காவல் காக்கிருனே"

"ஆசையின் காவலல்லடா அது, பொருமைக்காவல். பையில் கனமில்லாமல் வழியிலே பயமிருக்குமா? அவன் ஆத்துக்காரி அம்மன் கோயில் தங்க விக்கரகம் போல இருக்கிருளல்லவா? அழகிகளைத் துணைவராகப் பெறுபவர்களில் இம்மாதிரி "காவல் காரர்களாகி" விடுபவர்கள் எவ்வளவோவுண்டு. ஆபீஸ் உத்தியோக வேலை தீர்ந்த உடன் இந்த உத்தியோகத்தை மேற்கொண்டு வருவார்கள். அதுவும் இளையாளைக் கொண்ட கிழக்குமரர்களிடம் இந்த குணம் அதிகம்."

"தோலழகும் மேலழகும் கண்ணளவுதான். கைக்கு அகப்பட்டுவிட்டால் கறுப்பும் சிகப்பும் கண்ணுக்குத் தென்படவாப்போகிறது."

என அழுத்தம் திருந்த மாக வாதித்தான் அனுபவசாலியான ஆனந்தன்; பஞ்சாலையில் பணப்பட்டு வடா குமஸ்தா.

"அது சரி காமாட்சி தான் சமத்துவ வாதியாச்சே! ஆணையும் பெண்ணையும் ஒரேதிராசில் வைத்து, ஒரேநிரையாக நிறுத்துப் பூசைசெய்யப்பனுயிற்றே?

"அதெல்லாம் மேடையோடு, பேச்சொடு, எழுத்தோடுதான் சாமிகளே! மேடைப்பேச்சும் காகிதச் சித்திரமும் ஊராருக்குத்தான் அப்பனே! மேடையில் பேசுவான் பெண்கள் சுதந்திரம். வீட்டிலே ஆத்துக்காரியை சுட்டுப் பொசுக்குவான். காகிதத்திலே கண்ணாட்டியென்பான் வீட்டிலே கன்னத்திலே அறைவான். வெளியிலே இல்லறத்தேவதை என்பான். வீட்டிற்குள் மனைவியை, குளவியாய்க்கொட்டி, அடிமையாய் நடத்திடுவாட்டுவான். எழைகளின் துயர் கண்டு கண்ணீர் வடிப்பான், ஒருத்தன் காகிதத்திலே எழுத்துருவில். ஆனல் வீட்டுக்குவரும் பிச்சைக்காரனுக்கு எச்சில்கையைக் காட்டமாட்டான் அதேபரோபகார சொல்வன்மை யாளன். இது தானப்பனே, பெரியோர்கள், பொதுநல ஊழியர்களின் உலகரகசியம்.

"பெண்ணு யிருந்தாலென்ன? ஆணு யிருந்தாலென்ன? அவரவர்களுக்கு புத்தியும் கட்டுபாடும், நல்லொழுக்க ஆர்வமும் இருந்தால் அவரவர்கள் தங்களுக்குத் தாங்களே பாதுகாத்துக் கொள்வர்; பாதுகாப்புத் தேடியும் கொள்வார்கள். கெட்டவர்களை-கெட ஆசையுள்ளவர்களை என்ன தான் தடுத்து கொடிய காவல் சிறைக்கூடங்களில், நிலவறைகளில் அடைத்து வைத்தாலும் தடைப்பட்டு நிற்கவா போகிருர்கள்? இல்லாமலா கவலைப் பட்டார் பட்டினத்தடிகளும், பெண்களை எப்படிநம்புவது என்று."

(தொடரும்)


வாசித்தாகவேண்டிய புத்தகம்.
"உடுமலை பீரங்கி"
(முதல் புத்தகம்)




120 பக்கங்கள்

சில பிரதிகளே பாக்கியுள்ளன.

பிரதி 1க்கு விலை அணு 12.
தபால் சார்ஜ் வேறு
பீரங்கி புத்தக நிலையம்,
33. திருவேங்கிட முதலித் தெரு,
பெரியமெட்டு, சென்னை. 3

"மின்மினி"
(பிரதி 1, 15, தேதிகளில்)
தமிழ் சினிமா பத்திரிகை
நிர்வாகி, "மின்மினி";
245, வால்டாக்ஸ் ரோடு,
சென்னை, 3.

சீர்திருத்த வாதி
(வார இதழ்)
தமிழ்நாட்டின், தமிழினத்தின் முன்னேற்றத்திற்காகச் சிறந்து பணியாற்ற அன்று வெளிவருகிறது:
ஏஜண்டுகள் தேவை:—
விவரங்கட்கு:— நிர்வாகி
சீர்திருத்தவாதி
சேண்பாக்கம்
வேலூர் (வ—ஆ)

டெலிபோன்: 86729.
நியூடன் அண்டு கம்பெனி,
80, வாலாஜா ரோடு, மௌன்ட் ரோடு,
சென்னை 2,

கண்ணுக்கினிய எங்கிரேவிங்குகளும், சகல வித ஆப்டோன் பிளாக்குகளும், லைன் பிளாக்குகளும், ட்ரைகலர் பிளாக்குகளும், ரப்பர் ஸ்டாம்புகளும் செய்வதற்கான சிறந்த இடம். நம்பிக்கையும், புகழும் வாய்ந்த தக்க இடம்.

வெளியூர் ஆர்டர்களுக்கு பிரத்தியேக கவனிப்பு.


Edited and Published by B. Ranganadha Naidu, 33, Thiruvengada Mudali Street, Periamet, Madras. 3. Printed by J. A. SILVIA at the "LIBERATOR" Press 2-11, Mount Road, Madras 2.
Jt: Editor; PIVIAR.